Registered as a News Paper

பொழிவு: 27
குவிப்பு: 02
பக்கங்கள்: 16
விலை: 40/-
மாசி: 2022

# மன்னா

(ISSN 1800-2641) MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 41வது புதிய ஆண்டுப்பயணம்"

## மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 41ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டம்






மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 41 ஆண்டு நிறைவை கடந்த 29.01.2022 அன்று தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி ஆலய மண்டபத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையிலே மறைமாவட்ட குருக்கள், துறவிகள் இன்னும் அரச அரச சார்பற்ற உத்தியோகஸ்தர்கள் உயர் அதிகாரிகள் கலந்து இறை மக்களோடு இத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

→08

## அமலமரித் தியாகிகள் சபையின் 175 ஆவது ஆண்டு நிறைவு



1847ம் ஆண்டு பிரான்ஸ் தேசத்தில் இருந்து இலங்கை நாட்டிற்கு வருகைதந்த அமலமரித் தியாகிகள் இறை நம்பிக்கையை இலங்கையில் கட்டியெழுப்புவதற்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்து தங்களின் வாழ்வையும் பணியையும் நிறைவு செய்யும் 175 வருட நிறைவிலே மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றனர்.

இதன் ஆரம்ப நிகழ்வாக கடந்த 14ம் திகதி மாசி மாதம் 2022ம் ஆண்டு யாழ், கொழும்புதுறை புனித யூஜின் டி மசனெட் சிற்றாலயத்தில் நன்றி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

→14

## மறையாசிரியர் உருவாக்கப் பயிற்சி மேற்கொள்ள வடக்கு – கிழக்கு ஆயர் மன்றம் தீர்மானம்



இலங்கையின் நான்கு தமிழ் மறைமாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் இளையோருக்கு ஒன்றிணைந்த மறை ஆசிரியர் உருவாக்கப் பயிற்சியை மேற்கொள்ள வடக்கு-கிழக்கு ஆயர்கள் மன்றம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது. 12ஆம் திகதி கடந்த புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு ஆயர்கள் மன்றத்தின் ஆறாவது கூட்டத்தொடரில் இத்தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது. இதன்படி யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மறைமாவட்டங்களிலிருந்து தலா 12 பயிலுனர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கான ஒருமாத கால வதிவிடப் பயிற்சியை மடுத் திருத்தலத்தில் உள்ள தியான இல்லத்தில் நடாத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்படவிருகின்றன.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகள் நான்கு மறைமாவட்டங்களின் மறைக்கல்வி நிலைய இயக்குனர்களோடு இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். எதிர்வரும் யூலை மாதம் இப்பயிற்சி நடாத்தப்படவுள்ளது.●

## மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயம், புனித காணிக்கை அன்னை ஆலய திருவிழாக்கள்




மன்னார் புனித செபஸ்ரியார் ஆலயத் திருவிழாவானது 20.01.2022 அன்று மூன்று திருப்பலிகளாக நடைபெற்றது. முதலாவது திருப்பலியானது காலை 05.30 மணியளவில் திருச்செபமாலையுடன் பங்குதந்தை அருட்பணி. இ. அகஸ்ரீன் புஸ்பராஜ் அடிகளார் தலைமையில் உதவிப் பங்குத் தந்தையர்களும் இணைந்து ஒப்புக் கொடுக்கப்பட்டது. இரண்டாவது திருப்பலியானது காலை 7 மணியளவில் திருச் செபமாலையுடன் கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

→14

## மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஆயத்துவ பணியிலே 10 ஆண்டுகள் நிறைவு



பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை 11.02.2022 அன்று தன்னுடைய ஆயத்துவ பணியிலே 10 ஆண்டுகள் நிறைவு செய்கின்றார்.

அவருடைய வாழ்வை சற்று பார்க்கின்ற போது இவர் 1948 ம் ஆண்டு வைகாசி மாதம் 20ம் திகதி யாழ்ப்பாணத்திலே பிறந்தார். தன்னுடைய ஆரம்ப வாழ்க்கையை கொழும்பிலே அமைத்துக் கொண்டார். இவர் திரு,திருமதி. விசுவாசம் சேவியர் பஸ்ரியன் பெர்னாண்டோ, ஞானசொறுபி பெர்னாண்டோ ஆகியோரின் மகனாவார். இவருடைய கல்வி வாழக்கையை நோக்கும் போது இவர் க.பொ.த சாதாரண தரம் வரை (1953 -1964) கொட்டகலை புனித பெனடிக்ற் கல்லூரியில் பயின்றார். பின் 1965இல் சிறிய குருமடத்தில் இணைந்து தன் கல்வியைத் தொடர்ந்தார். 1966ம் ஆண்டு இலங்கை தேசிய குருமடத்திலே இணைந்து மெய்யியல் கல்விக்காக தன்னை அர்ப்பணித்து கொண்டார்.

→14

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

உங்கள் அனைவரையும் மீண்டும் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையின் பிரஜைகளாகிய நாம் பல கோணங்களில் சிந்தனைகளை திருப்ப வேண்டிய நிலை தோன்றுகின்றது. இறை பராமரிப்பு எம்மோடு இருந்தாலும் நம்பிக்கை இறைவனில் எமக்கு அதிகரித்தாலும் பல ஏமாற்றங்கள் எம்மை வாட்டி வதைக்கின்றது. இலங்கை தேசம் ஒவ்வொருநாளும் நகரும் முறை எம்மை வருத்தத்தில் ஆழ்த்துகிறது. வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி நிற்கின்றது. கடலில் துடுப்பில்லாத, நங்கூரமில்லாத, கலங்கரை விளக்கும் இல்லாத படகு போல திசை தெரியாது வழிதெரியாது தவிக்கின்றார்கள்.

**இன்றைய நிலவரம்**

பல்லாண்டு காலமாக யுத்தம் நடைபெற்றது. ஆயுத பயம் மற்றும் உயிர் திடீர் என்று பிரிந்து விடும் என்ற பயம் இருந்தது. உணவு போதுமானதாக இல்லை, போக்குவரத்து இலகு படுத்தப்படவில்லை, அத்தியாவசியப் பொருட்களிற்கு தட்டுப்பாடு நிலவியது, ஆனால் மகிழ்ச்சி இருந்தது. குடும்ப உறவு இருந்தது. விடுதலை வேட்கை இருந்தது. ஆன்மீகம் இருந்தது அன்பிய வாழ்வு இருந்தது. நல்லுறவு இருந்தது. ஆன்மீகம் கல்வி அமைதி கலை கலாச்சாரம் நாடகம் எழுத்துருவாக்கம் புத்தக வெளியீடுகள் பாடல் வெளியீடுகள் என்று மனித முழு ஆளமைக்குரிய வாழ்வு இருந்தது.

கடந்த போராட்டம் அதன் விளைவுகள் குண்டு வெடிப்புக்கள் பயங்கரவாதம் என்ற பெயரில் ஆள்கடத்தல்கள் நீதி கோரி அனைத்தும் எட்டாக்கனியாகி இருக்கின்றது. மக்கள் மனம் பாதிக்கப்பட்டு எதிர்நோக்கு இல்லாமல் கொள்கை பிடிப்பில்லாமல் பொருளாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டு உயிருள்ளவரை வாழ்வோம் என்று மனமுடைந்து மக்கள் வாழுகிறார்கள்.

ஆனால் இலங்கையில் பல பாதைகள் அமைக்கப் படுகின்றது உதவிகள் அரசியல்வாதிகளினூடாக மக்களிற்கு கிடைக்கின்றது. அனைத்து அரச சார்பான திணைக்களங்கள் கட்டடங்கள் பெருந்தொகையாக பணம் செலவிட்டு கட்டப்படுகின்றது. அதிவேக நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுகின்றது.

விமானச் சேவை, கப்பல் சேவை நடைபெறுகின்றது. எங்கோ இருந்து கப்பல்கள் துறை வந்து செல்கின்றது சில கப்பல்கள் எமது நாட்டின் எல்லைக்குள் வந்து எரிந்து அழிந்து நாட்டையும் கடலையும், சூழலையும் மாசடையச் செய்து மக்களின் பொருளாதாரத்தை நாசமடையச் செய்கின்றது. பொருட்களின் விலை ஒவ்வொரு நாளும் அதிகரிக்கின்றது. ஏழை எளிய மக்கள் செய்வதறியாது வாழ்வில் விரக்தியடையும் நிலையில் வாழ்வின் விழிம்பில் சென்று அடுத்தது சாவா அல்லது ஏதாவது நன்மை நடக்குமா என்று ஏங்கும் நிலை உருவாகின்றது. வடக்கு கிழக்கு மக்கள் அடிபட்டு நொந்து துயரத்தில் உள்ள நேரத்தில் பேரினவாதம் இன்னும் வடகிழக்கை அடிமைநிலக்கு கொண்டு செல்ல மறைமுகமாக சில திட்டங்களையும் வெளிப்படுவதாக பல திட்டங்களையும் செய்து வருகின்றது. எதிர்கால சமுதாயத்திற்கும் தற்கால சமுதாயத்திற்கும் பல அழிவுகளைத் தரக்கூடிய பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. சிறப்பாக மன்னார் தீவு அழகான இலங்கையின் பெரிய தீவாகவும் இருக்கின்றது. பனை, தென்னை வளமும் பரந்த மீன்பாடுகளையும் கொண்ட தீவாக காணப்படுகின்றது. தற்போது நடைபெறுகின்ற காரியங்கள் அனைத்தும் தீவில் வாழும் மக்களிற்கு தெளிவில்லாமலும் அறியபடாமலும் உள்ளது. மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். ஆரம்பத்திலே அறிந்து தெளிந்து முடிவுகளை எடுக்க மக்கள் யோசிக்க வேண்டும். கனிய மண்ணகழ்வு, காற்றாலை மின் உற்பத்தி, பெற்றோல் உற்பத்தி, மணல் மண்ணகழ்வு தீவை விட்டு வெளியேற்றப்படுதல், கரையோரத் தாவரங்கள் அழிவு, கரையோர மணல் அகழ்வு கரையோரப் பகுதியில் கடல்நீர் பெருக்கெடுக்கும் போது தீவை அழிக்க கூடியதாக அமையும். காணிகள் கூடிய விலையில் மக்களின் ஏழ்மையைப் பயன்படுத்தி ஏமாற்றி வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வாங்கி குடியேற்றங்களை அமைக்கும் முயற்சி இந்த திட்டங்கள் முற்றிலும் அமுலாக்கம் பெற்று வருகின்றது. ஆகவே மக்களுக்கு இது சரியா? தவறா? வாழ்விற்கு உதவ கூடியதா, எதிர்கால சந்ததியினருக்கு நலமானதா, என சிந்திக்க வேண்டும் தீவின் வளங்கள் அழியும் போது மக்களின் கல்வி பாதிக்கப்படும் போது மழைவெள்ளம் அதிகரிக்கின்ற பொழுது நாம் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். வெளிமாவட்ட மக்கள் காணிகளை அதிக பணம் கொடுத்து வாங்குகின்ற பொழுது உள்ளூர் மக்கள் காணிகளை வாங்க முடியாமல் தவிக்கும் நிலை தோன்றுகின்றது. இவ்வாறு நடைபெறுகின்ற காரியங்கள் சரியானதா பொருத்தமானதா எதிர்கால சந்ததிக்கு உகந்ததா என சிந்திக்க, சிந்தித்து செயற்பட சிறிய அழைப்பு .விழித்தெழுந்து சரியானதை தேர்ந்து தெளிந்து செய்ய முயலுவோம். எமது இருப்பைப் பலப்படுத்துவோம் எதிர்கால சந்ததியினருக்கு நல்லதை விட்டுச் செல்வோம்.●

**என்றும் கிறிஸ்துவில்**
**அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்**
**மன்னா பதிப்பாசிரியர்**

# கூட்டொருங்கியக்கத் தேசிய மாநாடு யூன் மாதம் கொழும்பில் நடைபெற ஏற்பாடு

2023ம் ஆண்டு நடைபெறவுள்ள கூட்டொருங்கியக்கம் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான மறைமாவட்ட




மட்டத்திலான தயாரிப்புப்பணிகள் முடிந்த பிற்பாடு இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களும் ஒன்றிணைந்த தேசிய மாநாடு வருகிற யூன் மாதம் 14ம் திகதி பொரளையிலுள்ள அக்குவைனஸ் உயர் கல்வி கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் திருஅவையில் கூட்டொருங்கியக்கச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக கொழும்பு துணை ஆயர் பேரருட்திரு அன்ரனி ஜெயக்கொடி அவர்களின் தலைமையிலான குழுவினரின் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இம்மாநாட்டில் இலங்கையிலுள்ள வத்திக்கான் தூதுவரோடு இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களின் ஆயர்களும், மறைமாவட்டங்களில் கூட்டொருங்கியக்கச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பானவர்களும், தேசிய கூட்டொருங்கியக்கச் செயற்குழு அங்கத்தவர்கள், மற்றும் குருக்கள் துறவியரின் பிரதிநிதிகள், குருத்துவக் கல்லூரிகளின் அதிபர்கள், துறைசார் நிபுணர்கள், பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதிகள், பொது நிலையினரின் பிரதிநிதிகள், இளையோரின் பிரதிநிதிகள் போன்றோர் பங்குபற்றுவர்.●

## குருத்துவ வாழ்வில் வெள்ளி விழா காணும் அருட்பணி டேவிட் டொமினிக் சகாயம் அடிகளார்



கப்புச்சின் துறவற சபையின் அருட்பணியாளர் அருட்பணி டேவிட் டொமினிக் சகாயம் அடிகளாரின் குருத்துவ பணி வாழ்வில் 25வது ஆண்டு நிறைவு வெள்ளி விழா கடந்த 19.01.2022 புதன்கிழமை தரணிக்குளம் தூய ஜோசவ்வாஸ் ஆலயத்தில் காலை 10:30 மணியளவில் திருப்பலி நிறைவேற்றி கொண்டாடப்பட்டது.

திருப்பலியினை வெள்ளி விழா கொண்டாடும் அருட்பணி டேவிட் டொமினிக் சகாயம் அடிகளார் (OFM கப்புச்சின்) தலைமை தாங்கி நிறைவேற்றியிருந்தார். மேலும் அருட்பணி ஆரோக்கியம் செல்வராஜ் அடிகளார் (OFM கப்புச்சின்), அருட்பணி கிங்ஸ்லி றொபட் அடிகளார், அருட்பணி ஆரோக்கியம் அடிகளார், அருட்பணி அந்தோனிப்பிள்ளை அடிகளார், அருட்பணி அலெக்ஸ் மரிய செல்லையா (OFM கப்புச்சின்) ஆகியோர் இணைந்து திருப்பலியினை நிறைவேற்றியிருந்தார்கள். ➡ 15

## போர்டோவின் திருக்குடும்ப கன்னியர் சபையின் 200வது ஆண்டு யூபிலி நினைவு விழா



1822ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி பிரான்ஸ் நாட்டின் போர்டோவில் இடம்பெற்ற அற்புத ஆசீர்வாதத்தில் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து தம்மை "இருக்கிறவராக இருக்கிறவர் நாமே" என்று வெளிப்படுத்திய நிகழவின் 200வது யூபிலி ஆண்டை நினைவுகூர்ந்து யாழ். மரியன்னை பேராலயத்தில் கடந்த 03ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் சிறப்பு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. ➡ 15

## நானாட்டான் டிலாசால் கல்லூரியின் பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு



மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரியின் பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு 30.01.2022 அன்று கல்லூரி மைதானத்தில் அதிபர் அருட்சகோதரர் S.C. விஜயதாசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இப்பாடசாலையின் பழைய மாணவனும் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வருமாகிய அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளார் பிரதம விருந்தினராக அழைக் -கப்பட்டு பாடசாலை சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டார். ➡ 15

## மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

### மாசி 2022

02. புனித காணிக்கை மாதா திருவிழா - மன்னார், பாலைக்குழி காத்தான்குளம், சாம்பல்தோட்டம், துள்ளுக்குடியிருப்பு.
   - புனித அன்னை வேளாங்கண்ணி திருவிழா - படகுதுறை
   - புனித செங்கோல் மாதா திருவிழா - முத்தரிப்புத்துறை
04. இலங்கை மாதா பெருவிழா
   - அம்பிட்டிய தேசிய குருத்துவ கல்லூரி விழா
   - புனித செங்கோல் மாதா திருவிழா - கற்குழி
09. புனித வனத்து சின்னப்பர் திருவிழா - 7ம் கட்டை (பம்பைமடு)
11. புனித லூர்து அன்னை திருவிழா - ஜீவநகர், முதலைக்குத்தி, இரண்டாம் பண்ணை, பாசிமோட்டை, இறம்பைக்குளம், கூழாங்குளம், கீளியன்குடியிருப்பு, பிரமணாலங்குளம்,
   - புனித மரியாள் திருவிழா - சௌத்பார்
   - மேதகு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை, மன்னார் ஆயர் - ஆயர் அபிசேகம் (2012)
12. புனித லூர்து அன்னை திருவிழா - மாந்தை, மரக்காரன்பளை
   - புனித வனத்து சின்னப்பர் திருவிழா - கணேசபுரம்
22. புனித இராயப்பர் திருவிழா - கத்தாளம்பிட்டி

### சிறப்பு நிகழ்வுகள்

2ம் திகதி விபூதிப்புதன்

06ம் திகதி தொடக்கம் 11ம் திகதி வரை குருக்களுக்கான வருடாந்த தியானம்

## மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்களுக்கான புதிய பணி நியமனங்கள்

அருட்பணி. சீமான் மரியதாசன் - பங்குத்தந்தை, புனித அந்தோனியார் ஆலயம், சிறுத்தோப்பு.

அருட்பணி. டெனி கலிஸ்ரஸ் - பங்குத்தந்தை, புனித லூசியா ஆலயம், பள்ளிமுனை.

அருட்பணி. சவுல்நாதன் - அன்பியம் PMS, வழிபாட்டு ஆணைக்குழு.

அருட்பணி. ஜெஸ்லி ஜெகானந்தன் - பங்குத்தந்தை, புனித வேளாங்கண்ணி ஆலயம், ஓமந்தை.

அருட்பணி. அன்ரனி ஜோசப் IVD - பங்குத்தந்தை, புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.

அருட்பணி. சுகுணராஜ் குரூஸ் - பங்குத்தந்தை, புனித மரிய கொறற்றி ஆலயம், பண்டிவிரிச்சான்.

அருட்பணி. லோறன்ஸ் லியோன் - பங்குத்தந்தை, புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம், கீளியன்குடியிருப்பு.

அருட்பணி. ஜொலிமன் - உதவி பங்குத்தந்தை, புனித செபஸ்தியார் பேராலயம், மன்னார்.

அருட்பணி. பிரசாந்தன் - உதவி பங்குத்தந்தை, புனித ஆனாள் ஆலயம், வங்காலை.

அருட்பணி. லுமன் லோகு - உதவி பங்குத்தந்தை, புனித கார்மேல் அன்னை ஆலயம், அளவக்கை.

அருட்பணி. வரதன் குரூஸ் OMI - பங்குத்தந்தை, கனகராயன்குளம்●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# வவுனியா மருக்காரம்பளை தூய லூர்து அன்னை ஆலய அர்ச்சிப்பு மற்றும் திறப்பு விழா



கடந்த 23-01-2021 அன்று வவுனியா மருக்காரம்பளை தூய லூர்து அன்னை ஆலய அர்ச்சிப்பு மற்றும் திறப்பு விழா மாலை 4:30 மணியளவில் கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. ஆலய அர்ச்சிப்போடு ஆலயம் திறப்புவிழா செய்யப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமை தாங்கி நிறைவேற்றினார்.

அவருடன் இணைந்து வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தையும், ஆயரின் சிறப்புப் பணி முதன்மைக் குருவான, அருட்பணி S.K.தேவராஜா அடிகளார், வவுனியா மறைக்கோட்ட முதல்வரும், வேப்பங்குளம் பங்குத் தந்தையுமான அருட்பணி ஆரோக்கியம் அடிகளார், அருட்பணி செல்வராஜ் அடிகளார், OFM அருட்பணி டேவிட் டொமினிக் சகாயம் அடிகளார் OFM, அருட்பணி அலெக்ஸ் மரியசெல்லையா அடிகளார் OFM, அருட்பணி ஜெரி குயின்டஸ் அடிகளார் OFM, அருட்பணி உதயன் அடிகளார் OFM, பங்குதந்தை அருட்பணி பிரேம் ஆனந்த் அடிகளார் OFM ஆகியோரால் இணைந்து திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

➡ 15

# பூலார்குடியிருப்பு புனித பவுல் அடியார் ஆலயத்திருவிழா

புதுமைகள் நிறைந்த பழமை வாய்ந்த பூலார்குடியிருப்பு புனித பவுல் அடியார் ஆலயத் திருவிழா 25.01.2022 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. எமது அன்பிற்கும் மதிப்பிற்குரிய ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் ஆயரின் செயலாளர் அருட்பணி நீக்கிலாஸ் அடிகளார், மற்றும் தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி மாக்கஸ் அடிகளாரும் கலையருவி இயக்குநர் அருட்பணி செல்வநாதன் பீரிஸ் அடிகளாரும் கலந்துகொண்டிருந்தனர். திருவிழாத் திருப்பலி முடிவில் திருச்சுரூபப் பவனியும், ஆசீரும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து எமது ஆலய மூப்பர் திரு. A. மிக்கேல் அவர்களினால் ஆயர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டது. தொடர்ந்து ஆயரினால் ஆலய மூப்பருக்கும் பிரதேச சபை உறுப்பினர் திரு. J. ஜோண் நிகால் மற்றும் திரு. வியாகுலம் ஐயா அவர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்த நிகழ்வை அடுத்து அழைக்கப்பட்ட பிரமுகர்களுக்கு விருந்துசாரம் நடைபெற்றது.

➡ 14

# அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரிகளின் நித்திய வார்த்தைப்பாடு





அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சார்ந்த ஆறு அருட்சகோதரிகள் நிறோஷினி, மரிய யூலியற், சிந்துஜா, வியுமி, அனிற்றா, தேவகி ஆகியோர் தமது நித்திய வார்த்தைப் பாட்டினை கொழும்பு பொரளையிலுள்ள சகல புனிதர்கள் ஆலயத்தில் காலை 09.00 மணி திருப்பலியில் மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்ட திருப்பலியில் தம்மை அர்ப்பணம் செய்தனர். ➡ 15

# குஞ்சுக்குளம் முதல் நன்மைக் கொண்டாட்டம்



குஞ்சுக்குளம் பங்கின் புனித அங்காமத்து மாதா ஆலயத்தில் பங்குதந்தை அருட்பணி மரிய கிளைன் அடிகளாரின் ஏற்பாட்டில் கடந்த 09.01.2022 அன்று காலை 7.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் பெரும் மதிப்பிற்குரிய அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளாரினால் 10 மாணவ மாணவிகளுக்கு முதல்நன்மைத் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இத் திருப்பலியில் அருட்சகோதரிகளும் கலந்து கொண்டனர்●

# குழந்தை இயேசு ஆலயத் திருவிழா



வவுனியா வேப்பங்குளம் பங்கின் துணை ஆலயமான தாஸ்கோட்டம் கிராமத்தில் கோயில் கொண்டிருக்கும் அற்புத குழந்தை இயேசு ஆலயத் திருவிழாவானது 26-01-2022 அன்று காலை 6:30 மணிக்கு திருச் செபமாலையுடன் திருவிழாத் திருப்பலியும் ஆரம்பமாகி மிகவும் சிறப்பாக நடைபெற்றது,

திருப்பலி செட்டிக்குளம் பங்குத்தந்தை அருட்பணி வசந்தகுமார் அடிகளாரினால் தலைமைதாங்கி ஒப்புக் கொடுக்கப்பட்டது, மேலும் வவுனியா மறைக்கோட்ட முதல்வரும், வேப்பங்குளம் பங்குத்தந்தையுமான அருட்பணி ஆரோக்கியம் அடிகளாரும், தரணிக்குளம் பங்குத்தந்தை அருட்பணி பிரேம் ஆனந்த் அடிகளாரும், அருட்பணி ஜெரி குயின்டஸ் அடிகளார் கப்புச்சின், ஆகியோரும் இணைந்து திருப்பலியினை நிறைவேற்றியிருந்தனர். திருப்பலியினை தொடர்ந்து ஆலய வளாகத்தினுள் திருச்சுரூப பவனியும் திருச்சுரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றது.

திருவிழாவினை ஆயத்தம் செய்து ஒழுங்குபடுத்திய பங்குத் தந்தை, அருட்சகோதரர், அருட்சகோதரிகள், பொதுநிலைப் பணியாளர்கள், இறை மக்கள் அனைவருக்கும் இனிய திருவிழா நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்●

# கட்டைக்காடு புனித செபஸ்ரியார் ஆலய திருவிழாத் திருப்பலி

கட்டைக்காடு புனித செபஸ்ரியார் ஆலயத் திருவிழா 20.01.2022 அன்று காலை 7 மணியளவில் திருச் செபமாலையைத் தொடர்ந்து கிராம மக்களால் மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வர் பெரும் மதிப்பிற்குரிய அருட்பணி P. கிறிஸ்துநாயகம் அடிகளார் வரவேற்று அழைத்து வரப்பட்டு திருவிழாத் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. திருப்பலியானது மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி P.கிறிஸ்துநாயகம் அடிகளாரினால் தலைமை தாங்கி நிறைவேற்றப்பட்டது. மேலும் தந்தையோடு இணைந்து கட்டைக்காடு பங்குதந்தை ஸ்ரலின் சோசை (சாந்தன்) அடிகளார் மற்றும் பல அருட்பணியாளர்கள் இணைந்து திருப்பலியினை ஒப்புக் கொடுத்திருந்தனர்.

இத் திருவிழாத் திருப்பலியானது "புனிதரின் தியாகத்தில் திடம் பெறும் திரு அவையாவோம்" எனும் கருப்பொருளில் ஆலய மக்கள் ஒன்றிணைந்து சிறப்பித்திருந்தனர். திரு விழாவினை ஒழுங்குபடுத்தி தேவையான ஆயத்தங்களைச் செய்து ஒத்துழைப்பு வழங்கிய பங்குதந்தை பங்கு மக்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் அனைவருக்கும் இதய பூர்வமான இனிய திருவிழா நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்●

# சீலோம் வைத்தியசாலையின் 30வது ஆண்டு முத்து விழா

30வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சீலோவாம் மருத்துவமனையில் பணிபுரியும் வைத்தியர்கள் அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் மன்னாப் பத்திரிகை சார்பில் வாழ்த்துக்களை கூறி நிற்கின்றோம்.

சீலோவாம் மருத்துவமனையின் சேவை யுத்த காலத்தில் மக்கள் நோயுற்ற வேளையில் மருத்துவர்கள் இன்றியும் மருத்துவமனைகள் இன்றியும் தவித்து கஸ்ர துன்பங்களை அனுபவித்த போது வைத்தியர் ஜே.ரி. சேவியர் அவர்களின் சிந்தனையிலும் அருட்பணி அரசரெட்ணம், அருட்பணி. ஜோசப்மேரி அவர்களுடன் பல பொதுநிலையினரின் முயற்சியிலும் அன்னாள் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமை -யிலும் பங்களிப்பிலும் வழிநடத்துதலிலும் சீலோவாம் மருத்துவமனையின் சேவை இறைமகன் இயேசுவின் அன்பு இரக்கம் கருணை என்னும் விழுமியங்களை உள்ளடக்கிய -தாகவே உள்ளது.

கடந்த 30 வருடகாலமும் இயேசுவின் விழுமியங்களை வாழ்வாக்கி புத்துயிர் கொடுத்து மருத்துவமனையின் எல்லாவித வளர்ச்சிக்கும் தங்களை முழுமையாக அர்ப்பணித்த அனைவரையும் நன்றியோடு நினைத்து மேலும் மேலும் இறையாசீர் பொழியப்பட்டு இவ் வைத்திய சாலை சிறப்புற இறைவரம் கேட்டு ஆசிக்கின்றோம்●

# நானாட்டான் டிலாசால் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், திறன் வகுப்பறை திறப்பு விழாவும்



மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் திறன் வகுப்பறை திறப்புவிழாவும் அதிபர் அருட் சகோதரர் S.C. விஜயதாசன் தலைமையில் 21.01.2022 அன்று பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்களும், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வி. கிறேஸ் தேவ தயாளினி தேவராஜா அவர்களும், டிலாசால் அருட்சகோதரர் -களின் முன்னைநாள் மாகாண முதல்வர் அருட்சகோதரர் கிறிஸ்ரி குரூஸ் FSC அவர்களும் கலந்து சிறப்பித்தனர். ➡ 15


## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்

**உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1000/=, வெளிநாட்டுச்சந்தா ரூபா. 4000/=.**

**எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**


# மாந்தை புனித லூர்து அன்னை ஆலய திருவிழாத் திருப்பலி



மாந்தை புனித லூர்து அன்னை ஆலயத் திருவிழாவானது 12.02.2022 அன்று காலை 7.00 மணிக்கு திருச் செபமாலையுடன் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் பேரன்பிற்கும் பெரும் மதிப்பிற்குரிய பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் திருவிழாத் திருப்பலியானது கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

➡ 14

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

## முதலை குத்தி புனித லூர்த்து அன்னை ஆலய திருவிழாத் திருப்பலி



முதலைகுத்தி புனித லூர்த்து அன்னை ஆலயத் திருவிழாவானது 11.02.2022 அன்று காலை 7 மணியளவில் திருச்செபமாலையுடன் திருவிழாத் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. இத்திருப்பலி குடும்ப பணியக இயக்குனர் அருட்பணி எமிலியானுஸ் பிள்ளை அடிகளாரினால் தலைமை தாங்கி நிறைவேற்றப்பட்டது. மேலும் தந்தையோடு இணைந்து பங்குதந்தை அருட்பணி மில்ரன் தேவராஜா அடிகளார் அருட்பணி சுரேந்திரன் றெவ்வல் அடிகளார் அருட்பணி ஸ்ரலின் சோசை (சாந்தன்) அடிகளார் ஆகியோரும் இணைந்து நிறைவேற்றியிருந்தனர்.

இத் திருவிழாத் திருப்பலியானது "அன்னை மரியாள் நம் தாய்" எனும் கருப்பொருளில் ஆலய மக்கள் ஒன்றிணைந்து சிறப்பித்திருந்தனர். திருவிழாவினை ஒழுங்கமைத்து, தேவையான ஆயத்தங்களைச் செய்து ஒத்துழைப்பு வழங்கிய பங்குத்தந்தை அருட்பணி. மில்டன் தேவராஜ் அடிகளார், அருட்சகோதரிகள், இறைமக்கள் துறவிகள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இதயபூர்வமான திருவிழா நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.●

## புனித செபஸ்ரியார் ஆலயத் திருவிழாத் திருப்பலி

வவுனியா தெற்கிலுப்பைக்குளம் புனித செபஸ்ரியார் ஆலயத் திருவிழாத் திருப்பலியானது 23.01.2021 காலை 7.00 மணியளவில் திருச் செபமாலையுடன் கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. திருப்பலி அருட்பணி கமலநாதன் OMI அடிகளாரினால் தலைமை தாங்கி நிறைவேற்றப்பட்டது. தந்தையோடு பங்குத்தந்தை அருட்பணி S.K. தேவராஜா அடிகளார், அருட்பணி. ஜெஸ்மன் ராஜ் உதவிப்பங்குத்தந்தை திருத்தொண்டர் டிஷாந்தன் ஆகியோரும் இணைந்து திருப்பலி நிறைவேற்றி இருந்தார்கள்.

➡ 15


## புனித பிரான்சிஸ் அசீசியார் மறைப்பரப்பு துறவற சபையின் புதிய தலைவர் தெரிவு

புனித பிரான்சிஸ் அசீசியார் மறைப்பரப்பு துறவறசபையின் இலங்கை மாகாணத்தின் பொதுச்சபை கூட்டம் கடந்த தை மாதம் 26ம் திகதி தொடக்கம் 31ம் திகதி வரையிலான நாட்களில் நடந்தேறியது.

மேற்படி நிகழ்வு சங்கைக்குரிய அருட் சகோதரர் ஜோசப் கரிமலயில் மற்றும் அவரது ஆலோசனை சங்க உறுப்பினர்கள் சங்கைக்குரிய அருட் சகோதரர்கள் தோமஸ் புலிக்கல், K.S.ஜோசப் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. மேற்படி பொதுச்சபையில் இலங்கை மாகாணத்தின் புதிய தலைவராக சங்கைக்குரிய அருட்சகோதரர் ஜெயராஜ் அருளானந்தன் தெரிவு செய்யப்பட்டதோடு மேற்படி மாகாணத்தின் உபதலைவராக சங்கைக்குரிய அருட்சகோதரர் செபஸ்டியன் பிள்ளை தொபியாஸ் அவர்களும் ஆலோசனை சங்க உறுப்பினர்களாக அருட் சகோதரர்கள் செபமாலை செல்வநாயகம், சேவியர் ஜேசுராஜ் அல்பிரெட் ஸ்டாலின் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.●

## முத்தரிப்பு துறை புனித செங்கோல் மாதா ஆலய திருவிழாத் திருப்பலி





முத்தரிப்புத்துறை புனித செங்கோல் மாதா ஆலயத் திருவிழாவானது 02.02.2022 அன்று காலை 6.00மணிக்கு மன்னார் மறை மாவட்டத்தின் ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் திருச்செபமாலையுடன் திருவிழாத் திருப்பலியானது கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

மேலும் தந்தையோடு இணைந்து முத்தரிப்புதுறை பங்குதந்தை அருட்பணி சத்தியறாஜ் அடிகளாரும் மற்றும் பல அருட்பணியாளர்களும் இணைந்து திருப்பலியினை ஒப்புக் கொடுத்திருந்தனர். சிறப்பாக திருப்பலியின் மறையுரையின் போது புனித செங்கோல் அன்னையின் பெருமை பற்றியும் முத்தரிப்புதுறையின் சிறப்பு பற்றியும் புதிய ஆலயத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடர்பாகவும் ஆயர் தந்தை அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

திருவிழாவினை ஒழுங்குபடுத்தி தேவையான ஆயத்தங்களைச் செய்து ஒத்துழைப்பு வழங்கிய பங்குதந்தை, பங்குமக்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இதயபூர்வமான இனிய திருவிழா நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.●


## முத்தரிப்பு துறை புனித செபஸ்ரியார் இளையோர் மன்றத் திருவிழா

முத்தரிப்புதுறை புனித செபஸ்ரியார் இளையோர் மன்ற திருவிழாவானது 20.01.2022 அன்று காலை 6 மணிக்கு மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வரும் தற்தோதைய இளைஞர் ஆணைக்குழு இயக்குனருமான பெருமதிப்பிற்குரிய அருட்பணி A.விக்ரர் சோசை அடிகளாரின் தலைமையில் திருச்செபமாலையுடன் திருவிழாத் திருப்பலியானது கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

➡ 15

# உலகத் திருஅவைச் செய்திகள்

## உலக ஆயர் மாமன்றத்தின் 15வது பொது அவை



ஒரு திருப்பயணியாக உலகம் முழுவதும் திருஅவை எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்துத் தயாரிக்கப்பட்ட ஆயர் பேரவையின் அறிக்கை -களை அண்மையில் கூடி நிகழ்நிலை வலைதள தொடர்பு வழி (Zoom) விவாதித்துள்ளது உலக ஆயர் மாமன்றத்தின் 15வது பொது அவை.

"திருப்பயணியாகத் திருஅவை" என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குப் பின் கூடியுள்ள திருஅவைக் கூட்டம், உலகம் முழுவதும் தலத்திருஅவைகளில் இது தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் திருப்திகர -மானதாக உள்ளதாகத் தன் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது.

ஒரு திருப்பயணியாக திருஅவை முழுவதும் இணைந்து நடைபோடுவதற்கு உதவும் வகையில், உலக ஆயர் மாமன்றத்தின் வழியாகத் திருத்தந்தை ஆரம்பித்து வைத்த இந்த முயற்சியில், உலகின் 98 வீதமான ஆயர் பேரவைகளும், கீழை வழிபாட்டுமுறை ஆயர் மன்றங்களும் அதற்கு பொறுப்பான ஒருவரை நியமித்து செயல்பட ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக ஆயர் மாமன்றத்தின் பொதுச் செயலாளரால் வெளியிடப்பட்ட ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பலவும் தலத் திருஅவைகளின் அப்பகுதி மொழிகளில் மொழிபெயர்க்கும் பணி சிறப்புடன் இடம்பெற்று வருவதாகவும், கிறிஸ்தவ ஒன்றிப்புக் கூறுகள் இம்முயற்சிகளில் நன்முறை -களில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக ஆயர் மாமன்றத்தின் 15வது பொதுஅவை தங்கள் கருத்துக்கள் நன்முறையில் ஏற்கப்படுமா எனப் பொதுநிலையினரிடையே காணப்படும் அச்சம், பெருந்தொற்று பரவல், இளையோருக்கு உரிய இடமளித்தல், சில அருட்பணியாளர்களின் ஒத்துழைப்பின்மை போன்ற சவால்கள் பற்றியும் விவாதித்துள்ளது.●

## முதியோருக்கான சிறப்பு நாள் கொண்டாட்டம்



உலகில் முதியோருக்கான ஒரு சிறப்பு நாளைக் கடந்த ஆண்டு தொடங்கி வைத்துக் கொண்டாடியதைத் தொடர்ந்து, இவ்வாண்டு யூலை மாதம் 24ம் திகதி இத்தினம் சிறப்பிக்கப்படுமென திருப்பீடம் அறிவித்துள்ளது.

வரலாற்றின் இந்த இரண்டாவது உலகத் தினத்திற்குத் தலைப்பாக "அவர்கள் முதிர் வயதிலும் கனி தருவர்" என்ற 92ம் திருப்பாடல் வாக்கியத்தை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தேர்வு செய்துள்ளதாகத் திருப்பீடத்தின் பொதுநிலையினர், குடும்பம், மற்றும் வாழ்வுஅவை வெளியிட்ட செய்தி தெரிவிக்கிறது.

முதியோர் எவ்வாறு திருஅவைக்கும் சமுதாயத்திற்கும் முக்கியத்துவம் நிறைந்தவர்கள் என்பதை உணர்த்தும் இவ்வாண்டிற்கான இத்தலைப்பு, அவர்களின் மதிப்பையும் தேவையையும் குறித்து மீண்டும் சிந்திக்க நமக்கு அழைப்பு விடுப்பதாக உள்ளது.

➡ 15

## இத்தாலிய கர்தினால் இறைவனடிச் சேர்ந்தார்



இத்தாலிய கர்தினால் Luigi De Magistris அவர்கள் இறைவனடிச் சேர்ந்ததையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் தன் ஆழ்ந்த அனுதாபங் -களைத் தெரிவித்து இரங்கல் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். கடந்த 16.02.2022 புதன்கிழமையன்று பிற்பகல் 1.00 மணியளவில் 96 வயது நிரம்பிய இத்தாலிய கர்தினால் Luigi De Magistris அவர்கள் இறைவனடிச் சேர்ந்தார்.

Cagliari என்னும் இடத்தில் 1926ம் ஆண்டு பிறந்த இவர், அங்கேயுள்ள பல்கலைக்கழகத்தில் தனது தத்துவவியல் படிப்பை முடித்து உரோமன் குருமடத்தில் தனது குருத்துவப் பயிற்சியை முடித்தார். Cagliarid பேராலயத்தில் 1952ம் ஆண்டு, ஏப்ரல் 12ம் திகதியன்று பேராயர் Paolo Botto அவர் -களால் குருவாக அருட்பொழிவு பெற்றார்.

திருத்தந்தையின் பணிகளில் இவர் தனது பெரும்பாலான ஆண்டுகளை செலவிட்டார் என்றும், 1996ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் திகதி, திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் போல் அவர்களால் ஆயராகத் தேர்வு செய்யப்பட்டு அதே ஆண்டு ஏப்ரல் 28ம் தேதி Cagliariy உள்ள Sant' Anna ஆலயத்தில் கர்தினால் Giovanni Canestri அவர்களால் ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார் என்றும், 2015ம் ஆண்டு பிப்ரவரி 4ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் இவரை கர்தினாலாக உயர்த்தினார் என்றும் திருப்பீடச் செய்தியினில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.●

## நீதியான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப திருப்பீட அவை அழைப்பு



நீதியான சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் மக்களின் பணித்திறனுக்கு முக்கியத்துவம் நிறைந்த ஓர் இடத்தை வழங்க வேண்டும் எனத் திருப்பீட அவை தன் அறிக்கையில் அழைப்புவிடுத்துள்ளது.

மனிதகுல ஒருங்கிணைந்த வளர்ச்சிக் -கான திருப்பீட அவை வெளியிட்டுள்ள இம்மாதத்திற்கான அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளதுடன், புலம்பெர்ந்தோர், குடிபெயர்ந்தோர் உட்பட அனைவரின் வேலைக்கான உரிமை மதிக்கப்படவேண்டுமென விண்ணப்பித்துள்ளது.

➡ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத புனிதர்கள்

## புனித பிளாசியுஸ்

பெப்ரவரி – 03
ஆயர்,மறைசாட்சி –(கி.பி .316)



இப்புனிதர் ஆர்மீனியா (துருக்கி) நாட்டில் செபாஸ்டே நகர் ஆயராக இருந்தார், சிலினியஸ் கொடுங்கோல் மன்னன் காலத்தில் கிறிஸ்துவுக்காகக் குருதி சிந்தி இறந்தவர் என்பது மட்டும் உறுதியாக சொல்லப்படுகின்றது. அடுத்துக் கூறப்படுபவை ஆதாரவற்ற பாரம்பரியத்திலிருந்து வருபவை. இவை புனிதர் இறந்து 400ஆண்டுகளுக்குப்பின் குறிப்பிடப்பட்டாலும், மத்திய நூற்றாண்டுகளில் உரோமை நகரில் மட்டும் இவரது பெயரால் 30ஆலயங்கள் எழுப்பப்பட்டிருந்தன.

கிறிஸ்தவர்களை நசுக்கும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் பிளாசியஸ் தேவ ஏவுதலால் ஒரு காட்டிற்கு சென்று தவமுனிவராகக் குகை ஒன்றில் நாட்களை செலவழித்தார். இவரை சுற்றிலும் வனவிலங்குகள் காத்திருந்தன. அவை உடல் நலம் குறைவுபட்டிருந்தால் அல்லது, காயமுற்ற நிலையில் இருந்தால், அவற்றை குணப்படுத்தி வந்தார். இதனால் விலங்குகள் அவரது ஆசீருக்காகக் காத்துக்கொண்டிருந்தன. வேட்டைக்காரர்கள் அரசு சர்க்கஸ்களுக்கு விலங்கு பிடிக்க வந்தபொழுது குகையில் புனிதர் இருப்பதைக் கண்டு அவரை விலங்கிட்டு அரசனிடம் கொண்டு சென்றார்கள். போகும் வழியில் ஒரு தாய் தன் மகனின் தொண்டையில் மீன்முள் சிக்கித் தவித்து உயிருக்குப் போராடியதால் அவன் மீது கைவைத்துச் செபிக்கக் கேட்டுக்கொண்டார். புனிதரும் அவரது தொண்டையைத் தொட்டு செபித்த உடன், மீன் முள் தூரத்தில் வந்து விழுந்தது.

கப்படோசியாவின் ஆளுநர் அக்ரிகோலாஸ், பிளாசியசிடம் சிலைகளுக்கு ஆராதனை செய்ய பணித்தான். முதல் தடவை மறுதலித்தபோது நையப் புடைத்தான். அடுத்தமுறை மரத்தில்கட்டித் தொங்க விட்டு, கூர்மையான ஆணிகள் நிறைந்த ஆயுதம் ஒன்றைக் கொண்டு அவரது உடலில் இரத்தம் பீறிட்டுத் தெறிக்குமாறு கீறிக்கிழித்தான். இதிலும் புனிதரின் உயிர் பிரியவில்லை என்ற ஆத்திரத்தில் அவரது தலையை வெட்டிக்கொன்றான். கீழத் திருச்சபையில், தொண்டையில் ஏற்படும் சிதைவுகளை ஆற்றியதன் புகழ் கி.பி ஆறாம் நூற்றாண்டில் விரைவாகப் பரவியது. இவரது திருநாள் கீழத் திருச்சபையில் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.●

## புனித க்ளாத் லா கொலம்பியர்

பெப்ரவரி – 15 இயேசு சபைக் குரு – (கி.பி.1641 – 1682)



புனித மாக்கிரட் மரியிடம் திருஇருதய ஆண்டவர் தமது திரு இதயத்தைக் காண்பித்து, மனுக்குலத்தின் மீது தாம் கொண்டுள்ள மட்டற்ற அன்பைப் பற்றியும், மனிதர்களின் நன்றியில்லாதமை பற்றியும் வெளிப்படுத்தினார். இக்காட்சிகளும், காட்சிகளின் போது தரப்பட்ட செய்திகளும் நம்பத்தக்கவை என்று சொல்லி உறுதிப்படுத்த இறைவனால் அனுப்பப்பட்ட திருத்தூதர்தான் இயேசு சபைக் குரு க்ளாத் லா கொலம்பியர்.

இவர் கி.பி 1641ஆம் ஆண்டு லயன்ஸ் நகருக்கருகில் பிறந்தவர். 17 வயதில் இயேசு சபையிற் சேர்ந்தார். 33 வயதில் சபையில் இறுதி வார்த்தைப்பாட்டை அளித்தார். இரு மாதங்களுக்குப் பின்னர் போரலே மோனியால் என்ற இடத்தில் கல்லூரியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இக்கல்லூரிக்கு அருகில் இருந்த மினவின சபையில் சகோதரியாக வாழ்ந்தார் மாக்கிரட் மேரி. அவருக்கு ஆன்ம காரியங்களில் வழிகாட்டியாக இருந்தார் க்ளாத். பின்னர் யார்க் நகரில் இருந்த பெருமகளுக்கும் அரச அவையில் உள்ளோருக்கும் மறைப் போதகராக அனுப்பப்பட்டார். இந்தப் பெருமகள் பிற்காலத்தில் 2ஆம் ஜேம்ஸ் அரசனின் மனைவியானார். ஆனால் இங்கே இவர் சிலருடைய குற்றச்சாட்டினால் சிறைப்படுத்தப்பட்டு, மறைசாட்சியாக இறக்கவிருந்த வேளையில், பிரான்ஸ் நாட்டு மன்னன் 14ஆம் லூசியின் குறுக்கீட்டால் காப்பாற்றப்பட்டார். பின்னர் போரலே மோனியலுக்கு வந்த 41ஆம் வயதில் காலமானார்.

ஒருமுறை திருஇருதய ஆண்டவரிடம் மாக்கிரட் மேரி தனது பலவீனமான நிலையைச் சுட்டிக்காட்டினார். அதற்கு ஆண்டவர் சொன்னார். "வலிமை நிறைந்தவர்களைத் திகைக்கச் செய்யும் அளவுக்கு, இவ்வுலகில் எவை வலிமையற்றவையோ, அவற்றை மட்டும் நான் கருவிகளாகப் பயன்படுத்துகிறேன் என்பதை நீ அறியாயோ? எனவே என் ஊழியன் க்ளாத்திடம் தொடர்பு கொள். நான் கூறுவதாக அவரிடம் சொல்ல வேண்டியது, இந்தப் பக்தி முறையைப் பரப்ப அவர் தம்மால் ஆனவற்றையெல்லாம் செய்யட்டும். இதுவே எனது தூய இதயத்துக்கு மகிழ்ச்சியளிக்கும். தளர்ச்சி அடையாதிருக்கச் சொல். எத்தனையோ இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் ஆனால், தம்மீது நம்பிக்கை கொள்ளாமல் என்மீது முழ நம்பிக்கை கொள்ளும் எவரும் எல்லாம் வல்லவராகத் திகழ்வார்.●

## புனித மரியாயின் ஊழியர் சபை நிறுவியவர்கள்

பெப்ரவரி — 17 (கி.பி.13ம் நூற்றாண்டு)



இந்த எழுவரில் இருவர் திருமணமானவர். இருவர் விதவையர். மூவர் திருமணமாகாதவர். இவர்கள் எல்லோரும் தங்கள் நாடான இத்தாலியின் பிளாரன்ஸ் நகரில் தனிமையான இடத்தில் ஒன்றுகூடினர்.

தங்களின் உடைமைகள் யாவற்றையும் துறந்துவிட்டு, செப தவ வாழ்வை மேற்கொள்ள முடிவு செய்தனர் என்றால், வியப்பாக இல்லையா? 1233இல் முழுவீச்சில் உலகைத் துறந்தனர் இந்த அபூர்வ சகொதரர்கள். பிளாரன்ஸ் நகர் ஆயரின் வேண்டுகோளின்படி. தங்களுக்கென சபை ஒழுங்குகளை அமைத்துக் கொண்டனர்.

நாளடைவில் வேறு பலரையும் இந்தச் சபையில் சேர்த்தனர். இவர்கள் "மரியாயின் ஊழியர்கள்" என்றே அன்றும் இன்றும் அழைக்கப்படுகின்றனர். புனித டோம்னிக் சபையினரின் உடையைப் போல், ஆனால் கறுப்பு நிறத்தில் அணிந்து கொண்டனர். இந்தச் சபையைச் சேர்ந்த கன்னியர்களும் நாளடையில் பல மடங்களை நிறுவியுள்ளார்கள். 3ஆம் சபையினரும் உண்டு. 16வது நூற்றாண்டு முதல் வியாகுல அன்னைக்குச் சிறப்பான வணக்கம் காட்டுவதுதான் இந்தச் சபையின் தனிச் சிறப்பு.●

## புனித ஆன்ஸ்கர்

பெப்ரவரி – 03
ஆயர் – (கி.பி.865)




இவர் ஸ்காண்டிநேவியாவின் மறைபோதகர். பெனடிக்ரின் சபைத்துறவி. ஸ்காண்டிநேவியன் மறைப்பரப்புப் பணிக்குத் திருத்தந்தையின் தூதுவராக நியமனம் பெற்றார். கோர்வி (ஜெர்மனி) என்ற நகருக்கு இளந்துறவியாக வந்தவர். இவர் இங்கு தொடங்கிய துறவு மடம்தான் வடக்கு ஜெர்மனியில் வளர்ந்து வந்த கிறிஸ்தவப் பண்பாட்டிற்கு ஓர் தொட்டிலாக அமைந்தது.

இவர் சிறந்த மறையுரையாளர். ஏழைகளுக்கு மிகுந்த இரக்கச் செயல்கள் புரிவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். மறைசாட்சியாக இறக்கும் வாய்ப்பை விரும்பினார். ஆனால் 65 ஆவது வயதில் ப்ரமென் என்ற இடத்தில் புனிதராகக் காலம் சென்றார். ஸ்வீடனில் இவர் செய்த மறைபோதக அரும்பணிக்குப் பயன் கிட்டாமல் அவரது மறைவுக்குப் பிறகு அந்த நாடு விசுவாச சிதைவில் சிக்குண்டது.

ஒன்றரை நூற்றாண்டுக்களுக்குப் பின்னரே புத்துயிர் பெற்றது.●

## புனித ஜெரோம் எமிலியானி

பெப்ரவரி – 08 குரு – (கி.பி.1481 – 1537)



இவர் பிரபு குலத்தில் தோன்றியவர். படையில் சேர்ந்து பணியாற்றிய பின் த்ரவிதோ நகரின் ஆளுநராக நியமனம் பெற்றிருந்தார். அங்கு நடந்த போரில் கைதியாக்கப்பட்டு விலங்கிடப்பட்டார். சிறையில் அடைந்த இன்னல்களை மிகுந்த பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார். இவர் தேவ தாயாரின் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார். சிறையில் நாட்களை செபத்தியானத்தில் செலவழித்தார். சிறையில் மரியன்னை இவருக்குக் காட்சியளித்து இவருடைய விலங்குகளை உடைத்து, இவரைச் சிறையிலிருந்து விடுவித்தார். எமிலியானி தமது விலங்கை அந்தத் தாயின் பீடத்தில் தொங்கவிட்டுத் தேவ ஊழியத்தில் தம் வாழ்நாட்களைச் செலவழிக்க முடிவு செய்தார். அக்காலத்தில் ஏற்பட்ட கொள்ளை நோய்களால் வருந்துவோரைச் சந்தித்துத் தம்மாலியன்ற உதவி அனைத்தையும் அளித்தார்.

கொள்ளை நோயினிமித்தம் கைவிடப்பட்ட ஆதரவற்ற பிள்ளைகளைச் சேர்த்து அவர்களுக்குத் தொண்டு புரிந்தார். இவர்களைப் பேணுவதற்காகவே ஒரு துறவற சபையை நிறுவினார். பல நகரங்களிலும் இருந்த முதன்மையான குறிக்கோளாயிருந்தது. 1537அம் ஆண்டில் ஒருமுறை புனிதர் தொற்று நோயாளருக்குப் பணிவிடை செய்து வருகையில் தாமும் அதே நோயால் தாக்கப்பட்டு மண்ணக வாழ்வை முடித்துக்கொண்டு, விண்ணக வாழ்வைப் பெற்றக் கொண்டார். 9ஆம் பத்திநாதர் இவரை ஆதரவற்ற ஏழைகளுக்குப் பாதுகாவலராக அறிவித்தார்.●

## புனித பேதுருவின் தலைமைப்பீடம்

பெப்ரவரி — 22



ஆண்டவர் இயேசு திறவுகோல்களின் அதிகாரத்தைப் புனித பேதுருவிடம் ஒப்படைத்தார். இவ்வாறு புனித பேதுரு பெருமைப்படுத்தப்பட்டதை நினைவு படுத்தவே இந்தத் திருநாள் கி.பி 354ஆம் ஆண்டு முதல் கொண்டாடப் பட்டு வருகிறது.

இத் திருநாளைக் கொண்டாடுவதன் மூலம் புனித பேதுருவுக்கு நாம் வணக்கம் செலுத்துகிறோம். இறைவனின் சிறந்த பேணுதலால் அவர் திருச்சபையின் தலைவராக நியமனம் பெற்றார் எனவும் நினைவு கூர்கிறோம். எல்லாத் திருத்தந்தையர்களும் புனித பேதுருவின் வழித்தோன்றல்கள். எனவே அவர்கள் கிறிஸ்து ஏற்படுத்திய ஒரே திருச்சபையின் தலைவர்கள். இவர்களனைவரும் கிறிஸ்துவின் போதனைகளை நமக்குக் கற்றுக் கொடுக்கின்றனர்.

"காத்தேட்ரா" என்பதற்கு ஆயரின் அரியணை என்பது பொருள். இதிலிருந்து தோன்றும் சொல்தான் "கத்தீட்ரல்" என்பது. ஆயரின் அரியணை இருக்கும் ஆலயம் தான் "கத்தீட்ரல்" என்று அழைக்கப்படுகிறது. புனித பேதுரு தலைமைப்பீடம் என்பது புனித பேதுரு திருச்சபையின் தலைவர் என்பதைக் குறிக்கிறது. இத்திருநாளுக்குரிய கட்டளை செபத்தின் இரண்டாம் வாசகத்தில் கூறப்படுவது போல் "இத் திருநாளைக் கொண்டாடுவதன் மூலம் திருத்தூதர் பணி பெருமைப் படுத்தப்படுகிறது."●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பக்கம்



அருட்சகோதரி நிர்மலினி
சபைத்தலைவி

# இலங்கையில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் நூற்றாண்டுப் பணி



அருட்சகோதரி மாறி லூட்ஸ்
மாகாணத் தலைவி

2022 மாசித் திங்கள் ஐந்தாம் திகதி அப். கார்மேல் அருட்சகோதரிகள் இலங்கைத்தீவில் தம் பணியினை நிறைவு செய்யும் நூற்றாண்டினை மிக மகிழ்வுடன் நினைவு கூகின்றனர். இறைவன் கடந்த நூற்றாண்டில் எமக்கு அளித்த மாபெரும் கொடைகளுக்காக நன்றிகூறி அனைத்து மறை மாவட்டங்களிலும் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கின்றனர் மறைமாவட்ட ஆயர்கள், குருக்கள் மற்றம் திரு அவையுடன் இணைந்து இந்நாளை சிறப்பிக்கின்றனர். இந்தியாவிலிருந்து வருகை தந்த நான்கு அருட்சகோதரிக்ளுடன் ஆரம்பித்த எம் பணி இன்று விருட்சமாக இலங்கையில் பல பாகங்களுக்கும் பரவியுள்ளது. இவ்வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்து இவ்வுலகை விட்டுச் சென்ற எம் அருட்சகோதரிகளையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

"இறைவனே எம் நிறைவு" எனும் எமது அருங்கொடையினை அனுபவித்து கிறிஸ்துவின் அரசைப் பரம்பும் எம் பணி இன்று பல வழிகளினூடாக பரப்பப்படுகின்றது. அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் பணிகள்.

வண. அன்னை வெரோணிக் காவினால் கீழை நாடுகளில் எம் மீட்பர் கிறிஸ்துவின் பணியை தொடர்ந்து ஆற்ற ஆரம்பிக்கப்பட்ட இச்சபை ஆரம்பத்தில் கல்வி மூலம் அறிவொளியை பரப்ப பல் வகைப்பட்ட கல்வி நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆயினும் பிற்காலத்தில் காலத்தின் தேவைகளை உணர்ந்து தம் சேவையினை பல்வேறுபட்ட பணிகள் மூலம் பரவலாக்கினர். அவ்வகையில் இளம் பெண்களுக்கான விழுமியக்கல்வி, முன் பள்ளிப் பாடசாலைகள், பங்குத்தளங்களில் பல்வேறுபட்ட பணிகள், பெண்கள் இல்லங்கள், பெண்கள் விடுதிகள், பாலர் நிலையம், முதியோர் இல்லங்கள் தேயிலைத் தோட்டங்களில் பணி என அனைத்து வயதினருக்குமான சேவைகள் மூலம் கிறிஸ்தவ விழுமியங்களை மக்கள் உள்ளத்தில் விதைக்கின்றனர். அந்த வகையில் அப். கார்மேல் சபையினர் பல்வேறு சேவைகளை ஒரு நூற்றாண்டு காலமாக ஸ்ரீலங்காவில் ஆற்றி வருகின்றனர்.

## விழுமியக் கல்வி

தெய்வீகம் எப்போதும் மனிதனிடம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. அதை விழிப்படையச் செய்வது தான் விழுமியக்கல்வி, அனுபவக்கல்வி



சமூக, தொழில்நுட்ப துரித வளர்ச்சியும், உலகமயமாக்கலும் எமது சமூகத்தின் ஒழுக்கத்திலும், சமூக வளர்ச்சியிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதை நாம் நேரில் காண்கின்றோம். வெறுப்பூட்டத்தக்க நுகர்வுக் கலாசாரமும், மாணவர் மத்தியில் மிருதுத்திறன்கள் (ளழகவ ளமடைடள) வளர்க்கப்படவில்லை என்பது கல்வியாளர்கள் பலரும் சுட்டிக்காட்டும் முக்கிய குறைபாடாகும். பிறருடன் பண்பாகப் பேசுதல், நவீன தொடர்பு சாதனங்களைப் பண்பாகப் பிரயோகித்தல், நன்றியுடைய வராயிருத்தல், பிறரை உபசரித்தல், தன்னைப்போல் மற்றவரையும் நேசித்தல், மன்னித்தல், சகித்தல் போன்ற பண்புகள் யாவும் மிருதுத் திறன்களுள் அடங்கும். பாவனைப்பொருள்களின் தேவைக்கு மிஞ்சிய ஆசையின் ஆவேசமும், சமூக, கலாசாரக் கட்டமைப்பைச் சீர்குலைக்க முனைகின்றன.

பூகோள மயமாக்கல் எம்மை ஒண்றிணைப்பதை விட பிரிவினையை அதிகரிக்கின்றது. உறவுகள் அதிகரித்தாலும் அதில் ஆழமில்லை. குடம்ப உறவுகளும், நட்புகளும் உண்மையற்றதாக உருவெடுத்துள்ளது.

"ஆன்மீகம் இன்றி இறை நம்பிக்கை" "மாதா, பிதா குரு தெய வம்" "தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை" என்ற முதுமொழியில்லாத சமூகமாக மாறிவருகின்றது. சமூகத்தில் வழக்கிழந்து விட்டது. கல்வியறிவு அதிகரித்தாலும் மனிதப் பண்புகள் குறைந்து வருவதை நாம் காண்கின்றோம்.

எமது சிறுவர்கள் இனம், மதம், மொழி, சாதி, சமயம், பால், நிறம், பெற்றோரின் அந்தஸ்து, பூர்வீகம், உடல் நிலை முதலியவற்றிற்கு அப்பால் நின்று பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். மாணவனின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிடில் அவனில் வளர்ச்சியைக் காண முடியாது. எமது மாணவர்களின் அடிப்படைத் தேவை விழுமியக் கல்வியாகும்.

எனவே, எம் வருங்கால சமூகத்தைப் பாதுகாக்க விழுமியக்கல்வி புகட்டலின் முக்கியத்துவத்தை உணர்ந்து அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர் 2000 ஆண்டிலிருந்து விழுமியக்கல்வியில் அக்கறை கொண்டு தமிழில் மாணவர்கள் பயன்பாட்டிற்கென நூல்களைத் தயாரித்து ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் கற்பித்து வந்துள்ளனர். தமிழில் இந்நூல் "மகிழ்ச்சயான வாழ்வு" என்ற தலைப்பில் ஆசிரியர்களுக்கென அறிவரைப்பு வழிகாட்டி நூல்களும் வெளியிட்டுள்ளனர். வடமாகாண கல்வித் திணைக்கழத்தின் அனுசரணையுடன் இவ்வகுப்புகள் வடமாகாணத்தில் உள்ள 5 வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்கும் அறிமுகம் செய்யப்பட்டது. இக்கல்வி தொடர்ந்தும் வலுப்பெற்று ஊக்குவிக்கப்படவேண்டுமென்பதே அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினரின் அயராத ஆவலாகவுள்ளது. ஏனைய பாடங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் விழுமிய்க்கல்விக்கும் கொடுக்கப்பட வேண்டும். நவீன் டிஜிட்டல் யுகத்தில் வாழும் இக்கால மாணவர்கள் பண்பான வாழ்வு வாழ்வதற்கு விழுமியக்கல்வி இன்றியமையாதாகும்.

## கல்லூரிகள்

திருகோணமலையில் புனித மரியாள் கல்லூரியில் தம் கல்விப்பணியினை ஆரம்பித்தவர்கள் இன்று இலங்கையில் பல மாவட்டங்களில் அருட்சகோதரிகள் அதிபர்களாக இருந்து பாடசாலை நிர்வாகம் செய்து வருகின்றனர். வேறு சிலர் பல அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர்களாக பணியாற்றுகின்றனர். கிறிஸ்தவ விழுமியங்களை சமயக்கல்வி மூலமாகவும் ஏனைய கல்வி நடவடிக்கைகள், தொடர் பாடல்கள், பல்வேறு நிகழ்வுகள் மூலம் மாணவர்கள் உள்ளங்களில் விதைத்து, சமுதாயத்தில் ஒழுக்கமுள்ள, பொறுப்புள்ள, கடமையுணர்ச்சியுள்ள இறை நம்பிக்கை உள்ளவர்களாக வாழ அவர்களை தயார்படுத்துகின்றனர். பல்வேறு தொழில்களை நிர்வாகத் திறமையுடன் முன்னோக்கி நடாத்தி செல்லவும், பல்கலைக்கழகங்களில், கல்வியியற் கல்லூரிகளில் ஏனைய பெண்களுக்கு முன்மாதிரியானவர்-களாக வாழவும் தயார்படுத்தப்படுவதில் அருட்சகோதரிகள் தம் பணியைச் செய்து வருகின்றனர். எதிர்கால குடும்பங்களில் பொறுப்பான தலைவிகளாக எதிர்கால சந்ததியினை வழிநடத்தவும், சமூகத்தில் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவருடனும் வாழப் பழகவும், பாடசாலைகளில் ஏற்ற சூழ்நிலையினை உருவாக்கிக் கொடுக்கின்றனர்.

## முன்பள்ளிப் பாடசாலைகள்

"சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்" என்ற கூற்றிற் கேற்ப இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதற் கிணங்க சிறுவர்களை சிறுபராயத்திலிருந்தே நற்பண்புகளுடன் வாழப் பழக்க முன்பள்ளிப் பாட-சாலைகள் உதவுகின்றன. எமது அருட்சகோதரிகள் முன்பள்ளிக் கல்வி நெறியில் தகைமை பெற பல்வேறுபட்ட பாட நெறிகளை நிறைவுசெய்து தம்மைத் தயார் படுத்துகின்றனர். ஆங்கில மொழியிலும் பல கவிதை, பாடல்கள் போன்றவற்றை கற்பிக்கின்றனர்.



பலவித கைவேலைகள், விளையாட்டுக்கள் மூலம் தமது திறமைகளை தெரிந்து கொண்டு அதனை வளர்க்கவும் உற்சாகப்படுத்தப்படுகின்றனர். முதல் தடவையாக குடும்ப சூழலிலிருந்து வருகை தரும் சிறார்களை பலருடன் பழகி ஒன்றாக வாழ அவர்கள் பழக்கப்படுத்தப்படுகின்றனர். இறை நம்பிக்கையில் வாழவும் செபிக்கவும் அவர்கள் பயிற்றுவிக்கப் படுகின்றனர். அவர்களை, கலைநிகழ்வில் தம் திறமைகளை பெற்றோருக்கும், சமூகத்திற்கும் வெளிப்படுத்தி தன்னம்பிக்கையுடன் வாழ்வைத் தொடர்வதற்கு சந்தர்ப்பங்களை வழங்குகின்றனர். பிள்ளைகள் மூலம் பெற்றோருடன் தொடர்புகளை ஏற்படுத்தி நல்ல விழுமியங்களை குடும்ப வாழ்விலும் விதைக்கின்றனர்.

## பங்குத்தளங்களில் பணி

கிறிஸ்து தன் மூன்று வருடப்பணிக்காலத்தில் மக்களுடன் நெருங்கிய உறவை பேணினார். அவரவரின் தேவைகளை அறிந்து இறைவார்தைகள் மூலம் அவர்களின் உள்ளங்களை இறைவன் பக்கம் திருப்ப முயன்றார். அவர் பணி தொடரும் எம் பணியும். பங்குத்தளங்களில் பலதரப்பட்ட மக்களுடன் இறைவார்த்தையை பகிரவும், அவர்களின்



தேவைகளை நிறைவு செய்யவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. பிள்ளைகளுக்கு மறைக்கல்வி கற்பிப்பதும், அருட்சாதனங்களைப் பெற அவர்களை தயார்ப்படுத்தலும் மிகவும் முக்கியமாக இருக்கின்றது. இளைஞர்களை வழிநடத்தல், குடும்பங்களை தரிசித்து, அவர்களின் பிரச்சினைகளின் போது வழிகாட்டுவது, நோயுற்றோர் வயது போனவர்களுக்கு நற்கருணை வழங்கல் போன்றனவற்றை செய்வதும் பணியின் ஒரு பகுதியாக உள்ளது. பொருளா-தாரக் கஷ்டங்களினால் கஷ்டப்படும் குடும்பங்களுக்கு தேவையான போது உதவி வழங்கி அவர்களின் கண்ணீர் துடைப்பதும் கிறிஸ்துவின் கருணைச் செயல்பாட்டை வெளிப்படுத்துகின்றது." அன்பியக் கூட்டங்களை நடாத்தி, பல குடும்பங்களை ஒன்றிணைத்து இறைவார்த்தை பகிர்தலை ஊக்கப்படுத்தி குடும்பங்களிடையே இறைவிசுவாசத்தை ஆழப்படுத்துவதும் எமது பணியாக உள்ளது.

## பெண்கள் இல்லங்கள்

இலங்கையின் வரலாற்றில் பல்வேறு காலத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள், உள்நாட்டுப் போர்களினால் குடும்பங்களை பிரிந்த, பெற்றோர்களை இழந்த பல சிறுவர்களை விஷேடமாக பெண்கள் இல்லங்களில் பராமரித்து அவர்களது உடல், உள, அறிவு தேவையினை நிறைவு செய்தல், உடைந்த உள்ளங்களை குணப்படுத்த ஆறுதல்படுத்தி அவர்களை சமுதாயத்தில் இறைபண்புகள் நிறைந்தவர்களாக வாழத் தயார்படுத்துதல். சுனாமி, நீண்டகால இனப்போர் காரணமாக துன்பியல் அனுபவங்களைப் பெற்ற இவர்கள் படிப்படியாக மறந்து எல்லோருடனும் ஒன்றாக வாழக் கற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது. முறையான கல்வியினைப் பெறுவதற்கு, பாடசாலைகளில் கல்விகற்க வசதி செய்து கொடுக்கப்படுகின்றது. தமது ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள வழி சமைத்துக் கொடுக்கப்படுகின்றது. எம் அன்னை வெரோனிக்காவின் முக்கிய நோக்காக இருந்த இளம் பெண்களை வழிகாட்டல் எனும் எண்ணக்கருவினை இதன் மூலம் நிறைவுசெய்ய அருட்சகோதரிகள் விழைகின்றார்கள்.

## பெண்கள் விடுதிகள்

சிறந்த கல்லூரிகளில் கல்வி கற்கவும் புலமைப்பரிசில் பெற்ற மாணவிகள் கல்வியினைத் தொடரவும் மாணவிகள் பல பாடசாலைகளில் இருந்து விடுதிகளில் தங்கி கல்வியை மேற்கொள்ள வருவது வழக்கம் எனவே எமது கல்லூரிகளிலும் கன்னியர் இல்லங்களிலும் பெண்களுக்கான விடுதிகள் அமைக்கப்பட்டு அருட்சகோதரிகளினால் வழிநடத்தப்படுகின்றனர். விடுதிகளில் ஒரு முறையான நேரசூசி விளையாட்டுக்கள், ஒன்றாக செபித்தல், வாழ்தல் மூலம் அவர்கள் ஞான அறிவிலும் தேவபக்தியிலும், முழுமையான வளர்ச்சி பெற வாய்ப்பு கிடைக்கின்றது. பல குடும்பங்களிலிருந்து பல்வேறுபட்ட சூழல்களிலிருந்து வரும் மாணவிகளுடன் ஒன்றாக வாழ்வதனால் பிற்காலத்தில் சமூகத்தில் ஒற்றுமையாக வாழப் பழகிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இக்காலத்தில் பெண்கள் பலர் வேலை தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வதனால் தம் பிள்ளைகளை விடுதியில் சேர்க்கின்றார்கள். எனவே அவர்களுக்கு உதவி வழங்கவும், வீட்டில் பாதுகாப்பு நலன் கருதி, வளர்ந்த பெண்களை அருட்சகோதரிகளிடம் ஒப்படைப்பதனால் அவர்களைப் பாதுகாக்கவும் பெண்கள் விடுதி அருட்சகோதரிகளினால் நடாத்தப்படுகின்றது.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

தொடர் 06

# "மீட்புத் திட்டத்தில் நல்ல தந்தை புனித யோசேப்பு"

அருட்கலாநிதி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னான்டோ.
இயக்குனர், புனித யோசே வாஸ் இறையியல் கல்லூரி.
இயக்குனர், மன்னார் மறைமாவட்ட திருவிவிலிய ஆணைக்குழு.

**புனித யோசேப்பு - 'விவிலியப் புற நூல்கள்' (Apocrypha)ன் குறிப்புகளிலிருந்து**

**முன்னுரை**

புனித யோசேப்பு "நல்ல தந்தை" பற்றி நற்செய்திகளிலே அதிகமாக கண்டுகொள்ள முடியாத போது, எப்படி இவரது வாழ்க்கை சரித்திரத்தை அறிந்து கொள்ள முடியும்? பாரம்பரியமாக, புனித யோசேப்புவைப் பற்றி கேள்விப்படுகிற அவரது வாழ்க்கை நிகழ்வுகள் எங்கிருந்து நமக்குக் கிடைக்கப் பெற்றன? என்ற கேள்விகள் நம்மில் பலருக்கு எழுவது உண்டு. இந்தக் கேள்விகளுக்கு விடைகாண, கத்தோலிக்கர் பயன்படுத்தும் திருவிவிலியத்தின் அமைப்பு முறையினை நாம் விளங்கிக் கொள்வது இன்றியமையாததாகும். இந்த வகையிலே, கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் விவிலியமானது கிரேக்க மூல மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட 46 முதல் ஏற்பாடு நூல்களைக் (பழைய ஏற்பாடு) கொண்ட 39 "திருமுறை" நூல்களையும் (canonical books) மற்றும் 7 இணைத் திருமுறை நூல்களையும் (Deutero - Canonical) உள்ளடக்கியதாகும்.

இதில் பிரிவினைச் சபையினர், "திருமுறை" நூல்கள் என்று ஏற்றுக்கொள்ளாத 7 நூல்களும் (தோபித்து, யூதித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாரூக்கு, 1,2 மக்கபேயர் மற்றும் எஸ்தர் இணைப்பு (104 - 1624) தானியேல் இணைப்பு (324 - 90, 13-14) உள்ளடங்கும். கத்தோலிக்கர் இந்த நூல்களை இணைத் திருமுறை நூல்களாக அழைக்கின்றனர். பிரிவினைச் சபையினர் பயன்படுத்தும் திருவிவிலியத்தில் முதல் ஏற்பாட்டில் எபிரேய மூல மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட நூல்களைப் பயன்படுத்துகின்றனர். இந்த மொழிபெயர்ப்பில் மேற்கண்ட 7 நூல்களும், இணைப்புக்களும் இடம்பெறவில்லை.

கத்தோலிக்கர், பிரிவினைச் சபையினர் பயன்படுத்தும் புதிய ஏற்பாட்டில் எந்தவித வேறுபாடுமின்றி 27 நூல்களை உள்ளடக்கியுள்ளனர். கத்தோலிக்க திருஅவையின் திருவிவிலியத்திலே உள்ள 73 புத்தகங்கள் தவிர்ந்த, இன்னும் அதிகமான நற்செய்திகளும், திருமடல்களும் தொடக்க கிறீஸ்தவர்களின் காலத்தில் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும், தொடக்க திருஅவையின் போக்கைப் பற்றியும் எழுதப்பட்டுள்ளன. இவற்றை 'விவிலியப் புற நூல்கள்' (apocryphal books) என்று சொல்லி திருஅவை திருவிவிலியத்தின் சேர்க்கையிலே ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் அவற்றை, காத்திரமான நிலைகளுக்கேற்ப பத்திரமாக பாதுகாத்து வருகின்றது.

இவற்றில் வருகின்ற சில பகுதிகள் சில முரண்பாடான கருத்துக்களை கொண்டுள்ளபடியாலும், விசுவாசத்திற்கு புறம்பாக சில நிகழ்வுகள் வார்த்தைகள் இடையூறாக இருப்பதாலும், சில சம்பவங்கள் திரும்பத்திரும்ப ஒரே கருத்தை சொல்வதாலும், அவை தகுந்த வரலாற்று ஆதாரங்கள் அற்றதாலும், அன்னையாம் திருஅவை அவற்றை திருமுறை நூல்களுள் உள்வாங்கவில்லை. ஆயினும் இவை தொன்றுதொட்டு இறைமக்களின் பக்தி முயற்சிகளிலும், மறையுரைகளிலும், ஓவியங்களிலும், திரு அவையின் திருவழிபாடுகளிலும், திருஅவை தந்தையர்களின் மடல்களிலும் அதிகம் உள்வாங்கப்பட்டு பாரம்பரியமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றிலே இறைமக்களின் விசுவாத்தை அதிகப்படுத்தக்கூடிய, கத்தோலிக்க திருஅவையின் போதனைகளுக்கு இடறலாய் இல்லாதவை என்று கண்டறிந்த ஒருசிலவற்றை திருஅவை இன்றும் இறைமக்களின் பக்திமுயற்சிகளில் பாதுகாத்து வருகின்றது.

**மூன்று வகையான 'விவிலியப் புற நூல்கள்' (apocrypha)**

2ஆம் நூற்றாண்டிலிருந்து, பொதுவாக 3 வகையான 'விவிலியப் புற நூல்கள்' திருஅவையின் வரலாற்றிலே இடம்பெறத் தொடங்கின.

1. முதல் வகையான விவிலியப் புற நூல்கள், திருமுறைக்கு உட்பட்ட நற்செய்திகளை பொருளிலும் அமைப்பிலும் ஒத்திருக்கக் கூடியவை. இவற்றில், பப்பிரஸ் புல்லினாலான கடதாசியில் எழுதப்பட்ட ஒரு சில துண்டுகளே இன்று எஞ்சியுள்ளன. இதற்கு உதாரணமாக, பேதுருவின் நற்செய்தி என்கிற விவிலியப் புற நூலைக் குறிப்பிடலாம். இந்த திரு நூலானது, இயேசுவின் பாடுகளை முழுவதுமாக குறிப்பிடுகிறது. இதிலே இயேசுவின் பாடுகளைப் பற்றி புதிதாக எதையும் நாம் கண்டுகொள்வதில்லை.

2. இரண்டாவது வகையானவை, அவை இருப்பதைப் போலவே பாதுகாக்கப்படுகின்றன. காரணம், இவை ஆண்டவர் இயேசுவையும், மரியாவையும் பற்றிய பக்திக் கதைகளைக் கொண்டுள்ளன. உதாரணமாக, யாக்கோபுவின் குழந்தைப் பருவ நற்செய்தியைக் குறிப்பிடலாம். இந்த நூலானது மரியாவுக்கு 3 வயது நடக்கிற போது ஆலயத்திலே கொண்டு போய் விடப்பட்டதாகவும், பின்னர் அவருக்கு 12 வயது நடக்கின்ற போது, தபுதாரணான யோசேப்புக்கு அவர் மண ஒப்பந்தம் செய்யப்பட்டார் என்றும் குறிப்பிடுகிறது. மேலும், இந்த நூலானது மரியா குழந்தையை பெற்றெடுத்த பின்னர், யோசேப்பு அவரின் கன்னித்தன்மையினை சோதிக்க ஒரு தாதியை தேடினார் என்றும் எடுத்துரைக்கிறது. மேலும், 'மரியாவின் பிறப்பு நற்செய்தி' என்கிற நூலானது, மரியா வயது முதிர்ந்த சுவக்கீனுக்கும் அன்னம்மாவுக்கும் எப்படிப் பிறந்தார் என்பதைப் பற்றிப் பேசுகின்றது.

3. மூன்றாவது வகை, அப்போஸ்தலர்களின் பெயரிலே எழுதப் பட்டதாக, பாரம்பரியமாக திருஅவையின் நம்பிக்கைக்கு மாறான கோட்பாடுகளை கொண்டுள்ளவையாகக் காணப்படுகின்றன.

**புனித யோசேப்பைப் பற்றி பேசுகின்ற 'விவிலியப் புற நூல்கள்' இன் சாராம்சம்**

புனித யோசேப்பு என்று நாம் சொல்லக்கேட்டவுடனேயே நம் மனக் கண்முன் வருகின்ற உருவங்கள் அவர் ஒரு வயது முதிர்ந்த மனிதர், தலைமுடி கொட்டி வழுக்கைத்தலையோடு கூடிய உருவம், கையிலே ஒரு பூங்கொத்து, இறப்பின் படுக்கையிலே தலைமாட்டில் ஒருபக்கம் இயேசு மற்றப் பக்கம் இளமைப்பெண் மரியா. இவை எல்லா உருவங்களும் திருவிவிலியத்திற்கு புறம்பேயுள்ள இவ்வாறான பாரம்பரிய நூல்களில் இருந்தே நமக்கு கிடைக்கின்றன.

ஆனால் திருவிவிலியத்தில் புனித யோசேப்புவின் உருவத்தைப் பற்றியோ! அவரது வயதைப் பற்றியோ! எதுவும் குறிப்பிடப்படவில்லை. இவ்வாறான குறிப்புக்களை திருவிவிலியத்துக்குப் புறம்பான சில 'விவிலியப் புற நூல்கள்' (apocryphal books) கொண்டுள்ளன. புனித யோசேப்பின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும் இவ்வாறான 'விவிலியப் புற நூல்கள்' (apocryphal books) திருமுறை நூல்களின் சட்ட அமைப்பிற்குள் உள்வாங்கப்படாவிட்டாலும், அவை புனித யோசேப்புவைக் குறித்த பக்தி முயற்சியிலே மிகவும் செல்வாக்கு செலுத்துகின்றன. அவ்வாறான பதிவுகளின் சாராம்சம், திருஅவையின் போதனைகளிலும், ஓவியங்கள், உருவப் படங்கள், திருவழிபாடுகள் மற்றும் திருஅவைத் தந்தையரின் படிப்பினைகள் போன்றவற்றிலே காலப்போக்கிலே இடம் பிடிக்கத் தொடங்கின.

**1. 'யாக்கோபுவின் முதல் நற்செய்தி' (Protoevangelium of James)**

'விவிலியப் புற நூல்கள்' (apocryphal books) ல் மிகவும் முக்கியமானதாகவும், காலத்தால் முந்தியதாகவும் 'புனித யாக்கோபுவின் முதல் நற்செய்தி' (Protoevangelium of James) காணப்படுகிறது. இந்த எழுத்தாக்கமானது தொடக்கத்திலே 'யாக்கோபு எழுதிய "இயேசுவினதும் மரியாவினதும் பிறப்பின் நற்செய்தி" என்றே அழைக்கப்பட்டது. இந்த விவிலியப் புற நூல், இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே எழுதப்பட்டிருக்கலாம் என்று கணிப்பிடப் படுகிறது. இந்த நூல் "அன்னை மரியாவை மகிமைப் படுத்துதல்" என்பதையே நோக்கமாக கொண்டுள்ளதை அவதானிக்கலாம். அதாவது, மாற்கு நற்செய்தியிலே சொல்லப்படுகின்ற "இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன் தானே! யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா?"(6:3), என்ற வார்த்தைகளில் வருகின்ற, 'இயேசுவின் சகோதர்கள்' என்பவர்கள் அன்னை மரியாவின் வயிற்றில் பிறக்காத, மரியாளின் உறவினரின் பிள்ளைகள் என்பதை சுட்டிக்காட்டி, "மரியாவின் மாசற்ற கன்னித்தன்மை இங்கே மகிமைப்படுத்தப்படுகிறது." இவ்வாறான முழுமுதல் நோக்கத்தைக் கருத்திற் கொண்டு, இந்த நூலை இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரமுறை உறவான 'யாக்கோபு' எழுதினார் என்று விவிலிய ஆராய்ச்சிகள் விளக்குன்றன.

**'யாக்கோபுவின் முதல் நற்செய்தி' (Protoevangelium of James) ல் புனித யோசேப்புவின் வாழ்க்கை வரலாறு**

திருமுறைக்கு உட்படுத்தப்படாத 'யாக்கோபுவின் முதல் நற்செய்தி' (Protoevangelium of James) என்ற நூலிலே, திரு அவையின் விசுவாச சத்தியத்திற்கு முரண்படாத வகையிலே புனித யோசேப்புவைக் குறித்து சொல்லப்படுகின்றது.

புனித யோசேப்பு தாவீது அரசரின் வழிமரபிலே கி.மு. 38ம் ஆண்டளவில் நாசரத்திலே பிறந்தார். இவரது தந்தையின் பெயர் ஏலி என்கிற யாக்கோபு தாயின் பெயர் ராகேல் ஆகும். நாசரேத்தில் வாழ்ந்து வந்த யோசேப்பு தச்சுத்தொழில் செய்து வந்தார். மரியாளுக்கு மூன்று வயதானபோது அவருடைய பெற்றோர்கள் அவரை ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்துவிட்டுச் சென்றனர். அதன்பிறகு மரியாள் பதினான்கு வயது வரை அங்குதான் இருந்தார். அவருக்கு பதினான்கு வயது வந்தபோது ஆலயத்தில் இருந்த தலைமைக் குரு (பொதுவாக சிமியோன் என்று சொல்லப்படுகின்றது), "பதினான்கு வயது நிரம்பிய ஒவ்வொருவரும் தங்களுடைய இல்லங்களுக்குச் சென்று, தங்களுக்குப் பிடித்தமான கணவரை மணந்துகொள்ளுமாறு" சொன்னார்.

தலைமைக் குருவின் வார்த்தைகளுக்குக் கீழ்படிந்து மரியாவோடு இருந்த பதினான்கு வயது நிரம்பிய மற்ற பெண் குழந்தைகள் எல்லாம் தங்களுடைய இல்லங்களுக்குச் சென்றார்கள். மரியாள் மட்டும், "நான் ஆண்டவருக்கு அடிமை" என்று சொல்லி அங்கேயே இருந்தாள்.

இதற்கிடையில் ஆலயத்தில் இருந்த தலைமைக் குரு காட்சி ஒன்று கண்டார். அந்தக் காட்சியில், தாவீதின் குலத்தைச் சேர்ந்த ஆண்மகன்கள் தங்களுடைய கையில் தளிர் ஒன்றை ஏந்தி வந்து, அதனை தலைமைக் குருவிடம் கொடுப்பார்கள். யார் கொண்டுவந்த தளிர் மலர்ந்து பூப்பூக்கிறதோ அவரை மரியாள் கணவராக மணந்துகொள்ள வேண்டும் என்று வெளிப்படுத்தப்பட்டார். இச்செய்தியை தலைமைக் குரு மரியாளிடம் எடுத்துச்சொல்லி, குறிப்பிட்ட அந்த நாளுக்காக அவரும் மரியாவும் காத்திருந்தார்கள்.

காட்சியில் வெளிப்படுத்தப்பட்டது போன்று, ஒரு நாளில் தாவீதின் குலத்தைச் சேர்ந்த திருமண வயதில் இருந்த ஆண்மகன்கள் தங்களுடைய கையில் தளிர் ஒன்றை ஏந்தி வந்தார்கள். அந்தக் கூட்டத்தில் யோசேப்பும் வந்திருந்தார். யோசேப்புவைத் தவிர, எல்லாரும் தாங்கள் கொண்டுவந்த தளிர்களை தலைமைக் குருவிடம் கொண்டுவந்து கொடுத்தார்கள். யோசேப்பு தான் வயது மிகுந்தவர் என்பதனால் அப்படிச் செய்யவில்லை. மாறாக அவர் தான் கொண்டு வந்த தளிரை பீடத்தில் போய் வைத்தார். நீண்ட நேரமாகியும் யாருடைய தளிரும் பூப்பூக்கவில்லை. இதனால் குழம்பிப் போன தலைமைக் குரு இறைவனிடத்தில் மன்றாடிய போது, "யார் தன்னுடைய தளிரை பீடத்தில் வைத்திருக்கிறாரோ அவரே மரியாளுக்கு கணவராக ஆக வேண்டியவர். நீ சிறிது நேரம் பொறுத்திருந்து பார், அவருடைய தளிர் பூப்பூக்கும். அப்போது தூய ஆவியானவர் அதன்மேல் இறங்கி வருவார்" என்றார்.

இதனால் தலைமைக் குரு சிறிது நேரம் பொறுத்திருந்து பார்த்தார். காட்சியில் வெளிப்படுத்தப்பட்டது போன்று யோசேப்பு பீடத்தில் வைத்த தளிர் திடிரென்று பூப்பூத்தது. பின்னர் அதன்மேல் தூய ஆவியானவர் புறாவடிவில் இறங்கி வந்தார். இதைப் பார்த்த தலைமைக் குரு யோசேப்புவை மரியாளுக்கு கணவராக மண ஒப்பந்தம் செய்தார். மண ஒப்பந்தத்திற்குப் பிறகு, யோசேப்பு தன்னுடைய சொந்த ஊரான பெத்லகேமிற்குச் சென்றார். மரியாள் நாசரேத்திற்குச் சென்றார். அவ்வேளையில், மரியா தூய ஆவியின் வல்லமையால் இறைமகனைக் கருத்தாங்கும் பேறு பெற்றார். மரியா திடீரென கருவுற்றதால் யோசேப்பு குழப்பம் அடைந்தார். நேர்மையாளரான இவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்காமல் மறைவாக விலக்கி விட நினைத்தார். மரியா கடவுளின் திருவுளத்தால் இறைமகனை கருத்தாங்கி இருப்பதை வானதூதர் வழியாக அறிந்த இவர் மரியாவை ஏற்றுக் கொண்டார்.

இயேசு பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த வேளையிலும், அவரைக் கோவிலில் ஒப்புக்கொடுக்க எருசலேம் சென்ற நேரத்திலும், ஏரோது அரசன் அவரைக் கொல்லத் தேடியபோதும் மரியாவையும், குழந்தை இயேசுவையும் மிகுந்த அன்புடனும் அக்கறையுடனும் இவர் பாதுகாத்தார். பன்னிரண்டு வயதில் இயேசு எருசலேம் கோவிலில் தங்கிவிட்ட பொழுது, யோசேப்பு மிகுந்த கவலையுடன் தேடி அலைந்து அவரைக் கண்டுபிடித்தார். தச்சுத் தொழிலில் வந்த வருமானம் மூலம் குடும்பத்தைக் காப்பாற்றினார். மரியாவும் நெசவுத் தொழில் மூலம் இவருக்கு உதவினார். யோசேப்பு இயேசுவுக்கும் தச்சுத் தொழிலைக் கற்றுக்கொடுத்தார். இவர் இயேசுவுக்கு 20 வயது நடக்கின்ற போது தன்னுடைய 60வது வயதுகளிலே கி.பி. 21/22 நாசரேத்திலே இயேசுவும் மரியாவும் அருகில் இருக்க யோசேப்பு பாக்கியமான மரணம் அடைந்தார் என்று இந்த விவிலியப் புற நூலிலே குறிப்பிடப்படுகிறது.

**2. தோமாவால் எழுதப்பட்ட விவிலியப் புற நூலான 'இயேசுவின் குழந்தைப்பருவ நற்செய்தி'**

இந்த நூலானது குழந்தை இயேசுவால் நிகழ்த்தப்பட்ட அநேக புதுமைகளை எடுத்துரைக்கின்றது. இந்த நூலிலே புனித யோசேப்பு தச்சுத்தொழில் செய்பவர் என்றும், அவர் உழவுத் தொழிலிற்கான கலப்பைகள், கொழுக்கள் என்பவற்றையும், மேலும், மரத்தளபாடங்கள், மரக் கைவேலைப் பொருட்கள், மரக்கட்டில்கள் செய்து கொடுத்தார் என்றும் சொல்லப்படுகிறது.

**3. விவிலியப் புற நூலான 'தச்சரான யோசேப்புவின் வாழ்க்கை சரித்திரம்'**

இந்த 'விவிலியப் புற நூலானது' (apocryphal work), யோசேப்பின் வாழ்க்கையின் இறுதி நாட்களைப் பற்றிப் பேசுகின்றது. இன்றைய நவீன இறையியல் ஆய்வின்படி, இந்த எழுத்தாக்கம் 2ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியையே பெரிதும் சார்ந்தது என்று எண்ணப்படுகிறது. இந்த நூலின்படி யோசேப்பு 111 ஆண்டுகள் வாழ்ந்ததாகவும், மரணப் படுக்கையிலே மரியாவும் இயேசுவும் அருகிருந்து ஆறுதல் மொழி பேச, அவர் தனது பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்பு வேண்டியதாகவும் குறிப்பிடப்படுகிறது. இவரை மரணப்படுக்கையில் கண்டு வேதனையுற்ற இயேசு ஆண்டவர், அதிதூதர்களான மிக்கேலையும், கபிரியேலையும் அழைத்து இவரின் ஆன்மாவை பொறுப்பெடுக்க கேட்டுக்கொண்ட தாகவும் இந்நூல் எடுத்துரைக்கிறது. யோசேப்பு இறந்த பிற்பாடு, இவரது உடல் இவரது பரம்பரைக்கு சொந்தமான கல்லறைத் தோட்டத்திலே அடக்கம் செய்யப்பட்டது

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் பக்கத் தொடர்ச்சி

# மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 41ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்


ஆகவே இறைமக்கள் ஒன்றாக கூடி ஆயர் குருக்கள் துறவிகள் இன்னும் ஏனைய பங்குகளில் இருந்து வருகை தந்த இறைமக்களோடு இணைந்து இந்த 41 ஆவது ஆண்டு நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்டம் 1981ம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்தில் இருந்து இன்னும் ஒரு புதிய மறை மாவட்டமாக மன்னார் மறைமாவட்டம் என்கின்ற பெயரிலே உருப்பெற்று முதல் ஆயராக பேரன்பிற்கும் பெரும் மதிப்பிற்குமுரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுடைய ஆயத்துவ பணியில் ஆரம்பிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து அவருடைய பணி மாற்றத்திற்கு பிற்பாடு இரண்டாவது மன்னார் மறைமாவட்ட ஆயராக பேரருட் கலாநிதி அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை தலைமையில் மறை மாவட்டம் உருப்பெற்று வந்தது. தற்போது இந்த 41வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்ற வேளையிலே தற்போதைய ஆயர் பேரன்பிற்கும் பெரும் மதிப்பிற்குரிய பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை அவர்களின் வழிகாட்டுதலிலே மறைமாவட்டம் இயங்கி வருகிறது.














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியம் வரையும் ஆற்றல் உள்ள அனைவருக்குமான அழைப்பு!

அமைதி, நல்லிணக்கம் மற்றும் வன்முறைகளற்ற பண்பாட்டை மேம்படுத்த

## வடக்கு, கிழக்கு ஆயர்கள் மன்றத்தின்

அமைதி ஆய்வு நிறுவனம் PEACE RESERCH INSTITUTE

நடத்தும்

## திறந்த ஓவியப் போட்டி

கருப்பொருள்

"அமைதி நல்லிணக்கம் மற்றும் வன்முறைகளற்ற பண்பாட்டை உருவாக்குவோம்."

விதி முறைகள்

1ᵃᵗ இடம் : ரூபாய் 10,000 — 2ⁿᵈ இடம் : ரூபாய் 7,000 — 3ʳᵈ இடம் : ரூபாய் 5,000

4ᵗʰ இடம் : ரூபாய் 3,000 — 5ᵗʰ இடம் : ரூபாய் 2,000

அத்துடன் தலா 1000 ரூபா கொண்ட 10 பரிசுகள்

அருட்பணி ம. செல்வநாயகம்
போட்டி இணைப்பாளர்

---

"அஞ்சாதே, ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன்" (தொ.நூ.26 : 24)



# டிவைன் மெர்ஸி தியான மையம்

கள்ளிகட்டைக்காடு, மன்னார், இலங்கை.

## டிவைன் மெர்ஸி தியான மையத்தின் நிகழ்வுகள்

**திங்கள் - வெள்ளி வரை**
நேரம் : மாலை 3.00 - 5.00
இறை இரக்க ஜெபமாலை, ஆராதனை, திருப்பலி

**சனிக்கிழமைகளில்**
ஒருநாள் தியானம்
நேரம் : காலை 9.00 - மாலை 4.00
(மதிய உணவு வழங்கப்படும்)

**போயா நாட்களில்**
(போயா நாளுக்கு முந்திய இரவு)
முழு இரவு ஜெப வழிபாடுகள்
நேரம் : இரவு 9.00 - அதிகாலை 5.00

**ஞாயிற்றுக்கிழமைகளில்**
முன்பதிவு செய்யும் குழுக்களுக்கான சிறப்பு தியானம்
(இளைஞர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொதுநிலைப் பணியாளர்கள், பங்கில் உள்ள பக்தி சபைகள் போன்ற குழுக்கள்).

**குணமளிக்கும் சிறப்பு வழிபாடுகள்**
ஜெபமாலை, இறை புகழ்ச்சி, திருப்பலி
இறைவார்த்தைப் பகிர்வு
நற்கருணை ஆராதனை

**வழிநடத்துபவர்கள் :** அருட்தந்தை ரபேல் கூத்தூர், V C. | அருட்தந்தை சஜி வர்கீஸ், V C. | அருட்தந்தை சேவியர் அன்ரனி, V C.

வாருங்கள் ! இறை ஆசீர் பெறுங்கள் !!

தொடர்புகளுக்கு: 076 191 6728 | 077907 9921 DMRC MANNAR YouTube DMRC MANNAR

---

## திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகை
## மன்னார் மறைமாவட்டம் கலையருவி

இடம் : கலையருவி
நேரம் : மாலை 06 மணி
காலம் : 04 மற்றும் 05 ஆம் திகதிகளில்
நுழைவு : இலவசம்
பிரதம விருந்தினர் : பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை (மன்னார் மறைமாவட்ட ஆயர்)

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.
இவ் ஆற்றுகைக்கு உதவ விரும்புவோர் எம்மை தொடர்பு கொள்ளவும்

பெயர் : அருட்பணி செல்வநாதன் பீரிஸ்
விலாசம் : கலையருவி
தொலைபேசி இல : 077 351 7707, 076 3801841

---

# நினைவு கூறுகின்றோம்..!

## 10ம், 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. அ. பிலிப்புபிள்ளை**
மண்ணில்: 13.11.1934
விண்ணில்: 04.11.2012

**திருமதி. பி. சவினம்மா**
மண்ணில்: 18.08.1937
விண்ணில்: 22.02.2021

அச்சங்குளம், நானாட்டான்.


உங்களது அன்பு முகங்கள் மறைந்தாலும் அழியாதது வீட்டுச் சென்ற நினைவலைகள்
ஆண்டுகள் பல கடந்து செல்லலாம் என்றும் மறையாத நினைவுகள் எம்முடன்
நினைத்துக்கொண்டு வாழ்கின்றோம் இவ்வுலகில் நீண்ட கால நினைவுகளை எண்ணியே
பாசமிகு தந்தை தாயாக பாரினிலே பரிவுடன் வாழ்ந்த காலம் நெஞ்சினிலே
உங்கள் ஆன்மா இறைவன் அருளில் இளைப்பாற எந்நாளும் வேண்டி நிற்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
அன்பு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

---

## 31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 30 09 1942



இறப்பு: 25 01 2022

**திரு. மனுவேல் வென்சஸ்லாஸ் பீரிஸ்**
(7ம் வட்டாரம், வங்காலை)

"கடவுளே உமது பேரன்பிற்கேற்ப எனக்கு இரங்கும்" (தி.பா 51)


எமது குடும்பத்தின் நல்லதொரு ஒளிவிளக்காய்
தலைவனாய் வாழ்ந்தவரே!
இறைவன் உறையும் இல்லத்தை உமது எண்ணங்களால்
அழகாக்கி திறம்பட வடிவமைத்த எம் தந்தாய்
நாடக ஒப்பனை, பொறியியல் அறிவுப் பெட்டகமாக,
அன்பானவராய், பண்பானவராய் தன்னடக்கத்தோடு
சாதனை பல புரிந்த சளைக்காத வீரனே,
நீங்கள் இறைவனின் திருவடியில் அமைதியில்
மகிழ்ந்து இளைப்பாற வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை மற்றும்
உற்றார் உறவினர்கள், நண்பர்கள்

---

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 22 04 1971



இறப்பு: 23 03 2021

**திரு.அந்தோனிப்பிள்ளை வேதநாயகம்**
(பொஸ்கோ)
பெரியகுஞ்சுக்குளம், மடுவீதி

கூடிக்குலாவி குதூகலித்து சிரித்து மகிழ்ந்த உம்
நினைவுகளை சிறையிட முடியவில்லையே!
தவிக்கின்றோம் தினமும்
இருப்பினும் நீர் இறைவனடியில் இளைப்பாறுகிறீர்,
என்றெண்ணி
இறஞ்சுகின்றோம் இறையருளை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

---

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 17 11 1947



உதிர்வு: 25 02 2019

**மத்தேசுப்பிள்ளை சூசைரெட்ணம்**
(கட்டைக்காடு)

"ஆண்டவர் தம் அன்பரின் சாவு ஆண்டவர் பார்வையில் மிக மதிப்பிற்குரியது" (தி.பா 116:15)

ஆண்டு மூன்று கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் உயிரோடு அப்பா! எங்கள் சின்ன குடும்பத்தை
பராமரிக்க நீர்பட்ட கஸ்டங்கள் எத்தனை அப்பா!
ஐயா, ஐயா என்று நீர் வளர்த்த உம் பேரப்பிள்ளைகள்
உம் நாமம் உச்சரிக்காத நாளில்லையே! எப்போது உம்மை
நினைத்தாலும் எம் கண்களில் கண்ணீர் கசியுதையா!
ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும்
அநாதை போல் உணர்கின்றோம் அப்பா!
எம் எண்ணத்தில் என்றும் வாழும்
உங்களது ஆன்மா இறைவன் சந்நிதியில் இளைப்பாற
என்றும் செபிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்: மனைவி,
அருட்தந்தை நியூட்டன் அடிகளார், மகள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பக்கம்

# கோவிட் முடக்கமும் இல்ல வழிபாடும்

**அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்**

இந்தக் கொடிய கோவிட்டிலிருந்து இறைவன் நம்மைக் காப்பாற்ற வேண்டுமென்று எல்லா மத தலைவர்களும் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் கேட்டுக்கொண்டே இருக்கிறார். ஆனால் கோவிட் நிலையோ குறைவுபடுவதாயில்லை. இந் நிலையில்: இறைவன் இருக்கின்றாரா? அவருக்கு நம்மட்டில் அக்கறை உண்டா? நமது செபங்களால் பயனேதும் உண்டா? போன்ற கேள்விகள் நமது மனங்களைக் குடைந்து கொண்டே நம்மை வாட்டி வதைக்கின்றன. ஆனால், இப்படிப் -பட்ட கேள்விகளுக்கு முகங்கொடுக்க நம்மில் எத்தனைபேர் தயார்? ஏனென்றால், சவால்களுக்குள்ளே எதிர்நீச்சல் போடுவது தான் வாழ்வின் வெற்றிக்கான படிகள்.

பல விதங்களில் இந்தக் கொடிய நோய் நம் அனைவருக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பமாய் அமைந்துள்ளது. அனைத்திற்கும் மேலாக வாடிக்கையாய் செய்து வந்த பலவற்றை நாம் திறனாய்வு செய்து வாழ இது ஓர் அரிய சந்தர்ப்பம். குறிப்பாக கடவுள் என்பவர் எனக்கு யார்? செபம் என்றால் என்ன? சமயம் என்றால் என்ன? கிறிஸ்தவன் என்றால் யார் போன்ற கேள்விகளை இதய சுத்தியோடு கேட்கத் தூண்டுகின்றது.

நமது வாழ்க்கை முறைகளை மீளாய்வு செய்து பார்க்க இது ஓர் இறை அனுபவ காலம். உதாரணமாக: இப்பொழுது நமது திருமணக் கொண்டாட்டங் களை எளிமையாக்கி உள்ளோம். தேவையற்ற செலவுகளுக்கான பணத்தை ஏழைகளுக்கு உதவ பயன்படுத்துகின்றோம் என நம்புகின்றோம். தேவையற்ற நிகழ்வுகளை நிறுத்தியுள்ளோம். அவற்றிற்கு செலவிட்ட நேரங்களை ஆக்கபூர்மான விதங்களில் செலவிடுகிறோம் என நம்புகின்றோம். இப்பொழுது எமது போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளன. வாகனப் புகையால் சூழல் மாசடைவது குறைந்துள்ளது. சுருங்கக் கூறின் நுகர்வுக் கலாசாரத்துக்குள்ளே மூழ்கிக் கிடந்த நாம் அத்தியாவசியங்களோடு வாழப் பழகிக் கொண்டிருக்கிறோம். எமது ஆன்மீகத்தைப் பொறுத்த மட்டில் இப்பொழுது ஆலயங்கள் எல்லாம் பூட்டப்பட்ட நிலையில். நாம் தனிமையில் அர்த்தமுள்ள விதமாகச் செபிப்பதற்கு இது ஒரு பெரும் சவால். பல சந்தர்ப்பங்களில் நாம் செபங்களைச் சொன்னோம். பாடமாக்கிய, புத்தகங்களில் உள்ள செபங்களைச் சொன்னோம். ஆனால் உண்மையில் செபித்தோமா? என்பது பெரும் கேள்வி. அர்த்தமுள்ள விதமாகச் செபித்தோம் என்றால் நமது சிந்தனையிலும் செயலிலும், வாழ்விலும் கணிசமான மாற்றம் அப்படி ஏற்பட்டிருக்க வேண்டும். ஆலயங்களில் வழிபாடுகளுக்குச் செல்ல முடியாத நிலையில் மாற்று வழி ஏதும் உண்டா என்று சிந்திப்பது அவசியம்.

**(கதை)** மாற்று வழிக்கு ஓர் உதாரணம் பார்வையற்ற ஒருவர். தெருவில் அமர்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தார். அவர் அருகே ஒரு டப்பா, ஒரு பலகை, பலகையில் ஒரு வாசகம்: "நான் ஒரு கண் இல்லாத பார்வையற்றவன்! உதவுங்க!" போவோர் வருவோர் பலரிருக்க ஓரிரு நாணங்களே அந்த டப்பாவில் விழுந்து



கிடந்தன. அவ்வழியே வந்த ஒரு வழிப்போக்கர். பார்வையற்றவரைப் பார்த்தார். வணக்கம் சொன்னார். விழுந்துகிடந்த ஓரிரு நாணயங்களைப் பார்த்தார். எழுதப்பட்ட வாசகத்தையும் பார்த்தார். நிதானமாய் யோசித்தார். முடிவு செய்தார். பலகையை எடுத்தார். வாசகத்தை கொஞ்சம் மாற்றி எழுதினார். அதே இடத்தில் வைத்தார். அப்படியே போய்விட்டார். அடுத்த ஐந்து மணி நேரத்தில் நிரம்பி வழிந்தது டப்பா. டப்பாவைச் சுற்றிலும் வேறு சில்லறைகள் சிதறிக் கிடந்தன. அடுத்த நாள் அதே போல் வந்துநின்றார் அதே வழிப்போக்கர். பார்வையற்றவரின் டப்பாவில் சில்லறைகள் நிரம்பி வழிந்ததைக் கண்டார். புன்னகைத்து அவருக்கு வணக்கம் சொன்னார். அவரிடம் கேட்டார் அந்த பார்வையற்றவர் "பலகையில் வாசகத்தை மாற்றி எழுதினீர்களா? எனக்கு தாராளமாக சில்லறை விழுகிறதே! என்ன எழுதினீர்கள்?" வாசித்துக்காட்டினார் அந்த ஞானமுள்ள வழிப்போக்கர் நான் மாற்றி எழுதியது இதுதான்: "இது ஓர் அழகான உலகம். என்னால்தான் பார்க்க முடியவில்லை உதவுங்கள்!" பார்த்தீர்களா! ஒரு மாற்றுச் செயலின் விளைவை? அதன் வெற்றியை? ஆதித் திருச்சபையில் இல்லங்களில்தான் வழிபாடுகள் நடாத்தப் பட்டன. 2ம் வத்திக்கான் சங்கமும் இல்லத் திருச்சபை பற்றிக் கூறுகின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் இல்ல வழிபாடுகள் பற்றி பல விதங்களில் கூறியிருக்கின்றார். இன்றைய உரையில் இல்ல வழிபாடு பற்றியே நான் கூற விரும்புகின்றேன். முன்னர் கூறிய ஏனைய விடயங்கள் பற்றி படிப்படியாகப் பார்ப்போம். நாம் ஆலயம் செல்ல முடியாத இச் சந்தர்ப்பத்தில் இல்ல வழிபாடுகளை அர்த்தமுள்ள விதமாக நடாத்த முடியுமா? என்று சிந்திப்பது நம் அனைவருக்கும் நன்மை பயக்கும். இல்ல வழிபாட்டுக்கான அம்சங்களை உதாரணத்துக்கு நான் இங்கே தருகிறேன். வீட்டில் உள்ள அனைவரும் செபிக்க ஒன்று கூடும் நேரத்தில் பின்வரும் அம்சங்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

**வருகைப்பாடல்,**

**மன்னிப்பு** (மௌனமாக) நாம் இறைவனின் பிரசன்னத்தில் உள்ளோம். அவர் நற்பிள்ளைகளாய் எப்போதும் வாழவில்லை, என்ற உணர்வை ஏற்படுத்துதல்.

**புகழ்ச்சிப் பாடல்,**

**ப.ஏ. வாசகம்,**

**பதிலுரைப் பாடல்.**

**பு.ஏ. வாசகம்** - திருமுகங்களிலிருந்து நற்செய்தி மூன்று வாசகங்களின் சுருக்க உரையை ஒருவர் சொல்லலாம். (மூன்று வாசகங்களையும் கட்டாயம் எடுக்க வேண்டும் என்று அல்ல. ஒரு வாசகத்தை எடுத்து அதை ஆழமாகச் சிந்திக்கலாம்).

**சிந்தனைப் பகிர்வு:** கடைசியாக ஒன்று கூடிய பின்னர் ஏற்பட்ட மகிழ்வான / துக்கமான நிகழ்வை பகிரலாம்.

உ+ம் சிறுவன்/ சிறுமி குடும்பத்தின் இன்னுமோர் உறுப்பினரால் புண்படுத்தப்பட்டேன். அந்த உறுப்பினர் அச் சிறுவனை அணைத்துக் கொள்ளல் (விளக்கம் வழிபாட்டின் பின்). தந்தை தனது வேலைத்தலத்தில் ஏற்பட்ட மகிழ்வான நிகழ்வைக் கூறலாம்.

அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறலாம். இவ்வாறு அந்தக் குடும்ப உறவு படிப்படியாக வலுவடையும். அந்த வாரத்தில் தாம் சந்தித்த நல்ல நிகழ்வுகளை நினைந்து நன்றி கூறலாம். பின்னர் அயலில் உள்ளவர்களின் தேவைகள், துன்பங்களுக்காக செபிக்கலாம். இவை முடிந்ததும் ஒருவருக்கொருவர் சமாதானம் கூறலாம்.

**இறுதிப் பாடல். நிறைவாக உணவுப் பகிர்வு** - தாய் உணவின் மீது ஆசீர்கூறிச் செபிக்கலாம்.

# இறை அழைப்பு அன்றும் இன்றும்

**கி. அருளப்பு - விடத்தல்தீவு.**

கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக நாம் அழைக்கப்படுகின்றோம்! "தகுதியை பார்த்து பொறுப்புக்களை கொடுப்பவன் மனிதன் பொறுப்புக்களை கொடுத்து தகுதியாக்குபவன் இறைவன்!" மீட்பு சரித்திரத்தில் பல கால கட்டங்களில் பல விதமான அழைப்புக்கள் கொடுக்கப்பட்டன! ஆபிரகாமுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு ஒரு இனத்திற்கு வித்திட்டது. மேசேக்கு விடுக்கப்பட்ட அழைப்பு அந்த இனத்தை அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட அழைப்பு. பவுலுக்கு விடுவிக்கபட்ட அழைப்பு மீட்புத் திட்டத்தில் பிறந்த இனத்தவரை கிறிஸ்துவுக்குள் உள்வாங்கச் செய்த அழைப்பு! இப்படி பல சிறிய பெரிய பணிக்காக பலவிதமான அழைப்பு வேதாகமத்தில் விடுக்கப்பட்டது! இவ் அழைப்புக்கு முன் ஆபிரகாம் புனித வாழ்வு வாழ்ந்தவரல்ல அவர் ஒரு சில குறைபாடுகள் உள்ளவர் மோசேயீசன் எகிப்திய வீரனைப் படுகொலை செய்து விட்டு அவர்களால் தேடப்பட்டபோது மிதியானுக்கு தப்பியோடி அங்கே எரிகின்ற முட்செடிகளில் இருந்து கடவுளால் அழைப்பு விடுக்கப்பட்டது. புனித பவுல் கிறிஸ்தவ மறையை அழிக்க கங்கணம் கட்டிக்கொண்டு தமஸ்குநகர் வந்த போது ஆண்டவர் யேசுவால் அழைப்பு விடுக்கப்பட்டது. இவர்களது பழைய வாழ்வு எப்படிபட்டதாக இருந்தாலும் அழைப்பை உணர்ந்து ஏற்றுக்கொண்ட போது அவர்கள் புதிதாக்கப்பட்டார்கள், புனிதமாக்கப்பட்டார்கள். இன்று எம்முடைய பலத்தையோ பலவீனத்தையோ பாராமல் தன்னுடைய திருமுழுக்கினால் பரிசுத்தப்படுத்தி தம்முடைய அன்புப் பணிக்காக ஒவ்வொருவரையும் பேர் சொல்லி அழைக்கின்றார். கடவுள் நம்மை தன் சாயலாகவும் பாவனையாகவும் படைத்தாரென்று ஆதியாகமம் (தொடக்கநூல் 1.26-27) கூறுகின்றது. ஆனால் இந்த நிலையை தலைகீழாக மாற்றி கடவுளைத் தன்னுடைய மனித சாயலாகவும் பாவனையாகவும் உருவாக்கும் சோதனை மனிதனுக்கு தொடர்ச்சியாக தொடர்ந்து வருகிறது அப்படிப்பட்ட மனிதர்கள் மத்தியில் சமகாலத்திலே நாம் வாழ்ந்து வருகின்றோம். அன்று இஸ்ராயேல் மக்களைப பார்த்த ஓசே இறைவாக்கினர் இப்படிக் கூறுகின்றார் இஸ்ராயேல் மக்களே ஆண்டவரின் வாக்குக்கு செவி கொடுங்கள் நாட்டில் குடியிருப்பவர்களே உங்களுக்கும் ஆண்டவருக்கு கிடையிலும் வழக்கொன்று நடக்கிறது. நாட்டில் உண்மை இல்லை, இரக்கமும் இல்லை. கடவுளை அறியும் அறிவும் இல்லை. பொய் ஆணை பொய் உரை கொலை, களவு, விபச்சாரம் பெருகி விட்டது. எல்லா நெறிமுறைகளையும் தகர்த்தெறிகின்றனர். இரத்தப்பழிக்கு மேல் இரத்த பழி சூழ்ந்து காணப்படுகின்றது. (ஓசே 4.1-2) இப்படிக்கூறுகின்றது ஆண்டவர் யேசுவை பின்பற்ற விரும்பும் எவரும் "தன்னலம் திறந்து தன் சிலுவையை நாள்தோறும் சுமந்து கொண்டு என்னை பின்பற்றற்றும் என்கின்றார்." (மத்தேயு 16.24) இப்படிக் கூறுகின்றது அன்று ஆபிரிக்க மக்கள் அடிமைப்படுத்தப்பட்டதைப் பற்றிடாண்யானி நாட்டு முன்னால் அதிபர் யூலியஸ் இப்படிக் கூறுகின்றார். வெள்ளையர்கள் எங்கள் மண்ணில் கால் வைத்த போது எங்கள் கையில் நிலம் இருந்தது. அவர்கள் கையில் பைபிள் இருந்தது. கண்களை மூடி எங்களை செபம் செய்ய சொன்னார்கள். நாங்கள் கண்களை மூடி செபம் செய்து விட்டு கண்களை திறக்கும்போது எங்கள் கையில் பைபிள் இருந்தது. அவர்கள் கையில் எங்கள் நிலமும் இருந்தது. என்ற கதையை சொன்னார்கள். விவிலியம் மனித வர்க்கத்தின் விடுதலைக்காக இசைக்கப்பட்ட மாபெரும் வரலாற்றுக் கீதம். அது காலப்போக்கில் மனிதர்கள் [illegible] த்தோடு பார்க்கின்றனர்! அடிமை செய்யப்பட்டோர் தங்கள் கைகளில் இருந்த விவிலியத்தை திறந்தபோது தான் அவர்களுக்கு தெரியவந்தது தெளிவு! படைத்தவனே படைக்கப்பட்ட மனிதவர்க்கத்தை அடிமைகளாக பார்க்க விரும்பாதபோது இறைவார்த்தையானது மனித இனத்தை எக்காரணம் கொண்டும் அடிமைப்படுத்தாது என்று தெளிவாகிறது. எனவே விவிலியத்தை விபரிப்போம். விளக்கத்தைக் காண்போம். விடியலை .வருவிப்போம். யேசு தன் திட்டத்தை செயலாற்ற பன்னிருவர் கொண்ட படையணியை சேர்த்தார். அலெக்சாந்தர் அறுபதாயிரம் படையணிகளை தன்னோடு இணைந்துக் கொண்டார். அகஸ்தஸ்சீசர் எண்பதாயிரம் வீரர்களை தன்னுடன் இணைத்தார். அசோகர் ஒரு இலட்சம் வீரர்களை தன்னோடு இணைத்தார். இவர்களின் அரசெல்லாம் காலப்போக்கிலே மறைந்தன! இயேசுவின் இராணுவத்தின் எண்ணிக்கை பன்னிரண்டு ஏர்முனை இளஞர்கள் ஒரு பட்டாக் கத்தியையும் பிடிக்கத் தெரியாத வீரர்கள்! இவர்களை நடத்த ஓர் தளபதி சீமோன் இராயப்பர் என்ற மீனவர் பள்ளியில் பயிலாதவர் பட்டங்கள் பெறாதவர், அரசியல் அறியாதவர். இயேசுவால் அரசியலே இவருக்கு கொடுக்கப்பட்ட பணி. மனிதர்களை பிடிக்கும் பணி! ஆன்மீகத்தில் இன்ப வீட்டுக்கு அழைக்கும் பணி. அவர்கள் உள்ளத்தில் அருளொளியை ஏற்றும் பணி. அரும்பணி அது பெரும்பணி அத்தோடு கடும்பணி. இதுவே இயேசுவின் நற்செய்தி பணி. இவர்களை பணிக்கு அனுப்பும் போது இயேசுபல அறிவுரைகளை கூறினார். இறுதியாக நீங்கள் சென்ற இடத்தில் ஒட்டிவந்த சின்னஞ்சிறு தூசிகளும் தேவையில்லை தட்டிவிடுங்கள்! ஆண்டவன் ஊழியத்தில் அன்றும் இன்றும் இலக்கும் ஒன்றே செய்தியும் ஒன்றே!

**நன்றி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள்

# யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

அருட்பணி. J.C. அன்ரனிபாலா
யாழ் மறைமாவட்டம்

இதழ் - 02

**அதிபராக, இயக்குநராக**

1930.09.08இல் அருட்பணியாளராக இலங்கைக்குத் திரும்பிய போது ஆறு மாதங்கள் இவரது கீழ்ப்படிதலைப் பரிசோதிக்கும் காலமாக எந்தவித நியமனமும் இல்லாமல் யாழ். ஆயர் இல்லத்தில் தங்கியிருந்து பல அருட்பணியாளர் -களுக்கு அவர்களது பணிகளில் சென்று உதவி செய்வதாக அமைந்தது. 1931இல் அனுராதபுரம் புனித யோசேப்பு கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். 1932.07.01 - 1934.10.31வரை மாதகல் புனித யோசேப்பு மகா வித்தியாலய அதிபராகப் பணியாற்றிய போது இளவைாலை புனித யாகப்பர் ஆலயப் பங்கு அருட்பணியாளர் சி. மரியாம்பிள்ளை அ.ம.தி.யிடம் அவ்வாலயப் பங்குமனையில் தங்கியிருந்து தம்மோடு இருந்த சில அருட்பணி மாணவர்களின் உருவாக்கத்திற்கு பங்கு மனையில் பயிற்சியளித்தார். அவ்வேளை புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவைாலை திருக்குடும்பக் கன்னியர்மடம் மகா வித்தியாலயம் போன்றவற்றில் உரிமை மறுக்கப்பட்டோரின் பிள்ளைகளின் அனுமதிக்கும், ஏனைய மாணவர்களுடனான சம ஆசன அமர்தலுக்கும், சம கற்றல் செயற்பாடுகளுக்கும் இவரது முயற்சியால் அனுமதி கிடைத்தது. இம்முயற்சியை இன்றும் இளவைலையின் உரிமை மறுக்கப்பட்டோர் பாராட்டிப் பெருமைப்படுகின்றனர். 1934 - 1935வரை மாதகல் பங்கு அருட்பணியாளராகவும் பணியாற்றினார்.

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை இவரையே 1935இல் முதல் அருட்பணி இயக்குனராகப் பெற்றது. அங்கு இவர் 1937வரை மறைக்கல்வி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். அருகில் இருந்த புனித யோசேப்பு முதியோர் இல்லம், புனித யோசேப்பு தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றிற்கும் பொறுப்பாகவும் பாஷையூர்ப் பங்கின் அருட்பணியாளராகவும் கடமை புரிந்தார். தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சிக்கும் வேலைக்கும் சேர்ந்த மாணவர்களின் திறமை காரணமாக அவர்கள் மூலம் தென்னந்தோட்டத்தையும், வெதுப்பகத்தையும் இலாபகரமாக இயக்கி முதியோர் இல்லம், தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி போன்ற நிறுவனங்கள் தன்னிறைவு காணவும், சுயமாக இயங்கவும் வழிவகுத்தார். இவரது வினைத்திறன் மிக்க பல்லூடக ஆளுமையை அறிந்த ஆயர் ஜே.ஏ. கியோமர் அ.ம.தி. சுதேசமயமாக்கலை நோக்கிய தனது கால மறைமாவட்டத்தின் தேவையை உணர்ந்து இவரையே யாழ். மறைமாவட்டப் பாடசாலைகளின் முகாமையாளராக 1936இலும், யாழ். மறைமாவட்ட அருட்பணி முதல்வராக 1937இலும் நியமித்தார். இவ்விரு பணிகளையும் சம காலத்தில் 12 ஆண்டுகள் ஆற்றிய முதல் இளம் சுதேச அருட்பணியாளர் இவரே.

**பாடசாலைகளின் நிர்வாகி, அருட்பணி முதல்வர்.**

இவரது காலத்தில் ஏனைய மத முகாமைாளர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவையில் இவரது ஆளுமைத் திறமையே பாலமாக அமைந்தது. கல்வி மற்றும் ஏனைய அரச கொள்கைகள் தொடர்பான திடீர் மாற்றங்கள், சமூக மதிப்பீடுகளின் மாற்றங்கள், மக்களின் மனநிலை வேறுபாடுகள், அரசாங்க அதிகாரிகளின் இட மாற்றங்கள் போன்றவை நிர்வாகிகளின் வேலைப்பழுக்களை அதிகரித்தன. அரச நிதி வழங்கலில் இருந்த பாரபட்சத்தை, அதாவது யாழ்ப்பாணத்தில் ஏனைய பாடசாலைகள் புறக்கணிக்கப்பட ஒரு பாடசாலைக்கு மட்டும் ரூபா 50,000/= கட்டிட நிதியாக ஒதுக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி ஏனைய மத பாடசாலைகளின் நிர்வாகிகளுடன் இணைந்து எதிர்த்துப் போராட வைத்து வெற்றியும் கண்டார். ஏப்ரில் 1940இல் இவரது ஏற்பாட்டில் வண்ணார்பண்ணை இந்து கலாசார மண்டபத்தில் எதிர்ப்புக்கூட்டம் இடம்பெற்றது. அதேவேளை பெப்ரவரி 1947இல் ஆயர் கியோமாரின் தலைமையில் இடம்பெற்ற எதிர்ப்புக்கூட்டத்தில் ஏனைய மதப் பேச்சாளரும் பங்குபற்றினர்.

ஐரோப்பிய மறையறிவிப்பாளர் பிரான்சிஸ் எம். பிசியன் அ.ம.தி.யின் பின்பு இவர் இப்பணியைப் பொறுப்பேற்றதால் அவருக்கு இணையாகச் சுதேசிகளாலும் பணியாற்ற முடியும் என்று நிரூபிக்க வேண்டிய தேவை இருந்தது. சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் தனியார் பாடசாலைக் கல்வியே கத்தோலிக்க சூழலைப் பாதுகாக்க வல்லது என்பதைப் பலவழிகளில் தானும் உணர்ந்து ஏனையோருக்கும் உணர்த் தியவர் இவரே. இந்த வகையில் பாடசாலைகளைத் தரிசித்து நிர்வாகச் சிக்கல்கள் கட்டிட தளபாடப் பராமரிப்பு, ஆசிரியர், மாணவர்களின் குறை நிறைகள், இடமாற்றங்கள், சம்பள நிலவரங்கள், மாணவர் பெறுபேறுகள், பாடவிதான நிலைமைகள், கல்வியறிவு, மறையறிவு என்பவற்றில் பெற்றோரின் மனநிலைகளைக் கேட்டறிந்து துல்லியமான ஆலோசனைகளை வழங்குவார். அதே ஐரோப்பிய மறையறிவிப்பாளர் பிரான்சிஸ் எம். பிசியன் அ.ம.தி. ஆற்றிய பணியாகிய அருட்பணி முதல்வர் பணியும் காலத்தின் தேவைக்கேற்ப இவரிடம் வந்து சேர்ந்தாலும், கனமாக இருப்பினும் ஒன்றையொன்று இலகுவாக்கியதெனலாம்.

பாடசாலைகளைத் தரிசிக்கும் அதேவேளை பங்குகளையும் தரிசித்து அருட்பணியாளர்களதும் மக்களதும் குறைநிறைகளைக் கேட்டறியும் இருமுனைச் சந்தர்ப்பங்களை வழங்கியது. இவ்வாறாகத் தனியார் பாடசாலைக் கல்விப்பணியானது கத்தோலிக்க திருஅவையைப் பொறுத்த வரையில், தனது பங்கு மற்றும் மறைமாவட்டத்தில் தனது மக்கள் மட்டில், கைநழுவிப் போகாத இணைப்பைக் கொண்டிருப்பதற்குக் காரணமாக இருந்ததையும், இன்று இது கைவிடப்பட்டுச் சிதறடிக்கப் பட்டதையும் காண்கின்றோம்.

இக்காலத்தில் இவர் ஐரோப்பிய, சுதேச அருட்பணியாளர்களின் மனநிலைகள், அவர்களது தேவைகள், இடமாற்றங்கள், சுகநலன்கள், பணி நிலைமைகள் என்பவற்றை ஆழமாக அறிந்த சுதேச அருட்பணியாளர் என்ற மட்டில் ஆயர் கியோமர் அ.ம.தி.க்கு ஆலோசனை வழங்கித் துணை நின்றதால் ஐரோப்பிய பண்பாட்டு மனநிலை கொண்ட ஆயர் கியோமரின் ஆளுகையின் பின்பாதிக்காலம் சுதேச மொழி பண்பாட்டு மனநிலை கொண்டதோர் மறைமாவட்ட அருட்பணி முதல்வரால் வளம்பெற்றதெனலாம். இப்பணிகள் காரணமாக



மறைமாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளையும், விடயங் களையும், இன்னும் பெரும்பாலானவர்களின் பரம்பரை பின்னணிகளையும் மிகவும் உன்னிப்பாகத் தெரிந்து வைத்திருந்தார்.

எனவே தான் தன்னை எவர் எப்பங்கிலிருந்து அணுகினாலும் அவர்களுக்கேற்பச் செயலாற்றவும் அவர்களைத் தனக்கேற்பச் செயற்பட வைக்கவும் கூடிய விவேகமும், நுண்மதியும், தூரநோக்கும் கொண்ட காலத்தின் பணியாளராகவும் மதிநுட்ப ஆலோசனையாளராகவும் பணியாற்ற முடிந்தது. ஆயர் கியோமர் மருத்துவ விடுமுறைக்கு ஐரோப்பா சென்று திரும்பும் வரைக்கும் ஒகஸ்ட் 1945 - நவம்பர் 1946வரை இவரே நிர்வகித்தார். 1946 யூலை மடுத்திருப்பதி விழாவைச் சிறப்பிக்க தனது வகுப்புத் தோழரும் நண்பருமான கொழும்பு மறைமாவட்ட இணைப் பேராயர் கலாநிதி பெஞ்சமின் தோமஸ் கூறே அ.ம.தி.யை அழைத்தார். அவரும் விழாவிற்கு தலைமை தாங்கிச் சிங்களத்தில் மறையுரையாற்றினார். 1939இல் ஆரம்பமான இரண்டாம் உலகப்போரின் ஒருவருடத் தாக்கங்கள் இலங்கையில் ஏற்படுத்திய அச்சங்கள் பொருளாதாரத் தடைகளின் பின்பு 1946இல் நிகழ்ந்த மேற்படி விழாவில் 50,000 இற்கு மேற்பட்ட யாத்திரிகள் பங்குபற்றினர். இவர்களின் தேவைகளைக் கவனிக்க முப்பது அருட்பணியாளர்கள் இவரது தலைமையில் பணியாற்றினர். மேலும் இவரது அழைப்பையேற்று சிலாபம் மறைமாவட்ட ஆயர் எட்மன்ட் பீரீஸ் அ.ம.தி. 1946 ஒகஸ்ட் திருவிழாவில் தலைமைதாங்கி மறையுரையாற்றினார். 30,000 வரையான யாத்திரிகர்களும் இருபத்து மூன்று அருட்பணியாளர்களும் பங்குபற்றினர்.

**பொறுப்பேற்கும் உரிமையுடன் இணை ஆயர்.**

1949 ஜனவரி 16இல் ஆயர் கியோமார் இருபத்தி ஐந்து ஆண்டுகள் ஆயர் பணியை நிறைவு செய்த போது மறுநாள் அவருக்கான வெள்ளி விழா இடம்பெற்றது. ஏற்கெனவே இவர் உரோமிடம் விண்ணப்பித்திருந்தபடி 1949 மார்ச் 11 இல் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி. மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்கும் வழிவரும் உரிமையுடன் உரோம் தலைமைப் பீடத்தால் நியமனம் பெற்றார். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் குறுகிய கால அதிபராக 1949 ஜனவரி - மார்ச் வரை இருந்த போது இது இடம்பெற்றது. ஏனைய இரு ஆயர்களின் அதாவது காலி மறைமாவட்ட ஆயர் என்.எம். லவுடாடியோ யே.ச., சிலாபு மறைமாவட்ட ஆயர் எட்மன்ட் பீரீஸ் அ.ம.தி. என்போரின் துணையுடன் முற்றுப் பெறாத நிலையில் இருந்த யாழ். பேராலயத்தில் ஆயர் கியோமர் அ.ம.தி. திருநிலைப்படுத்தல் திருப்பலியை 1949 மே 22இல் நிறைவேற்றினார். ஞாயிறு தினமாகிய அன்று இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல துறைகளில் இருந்தும் பல்வேறு தரப்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

1950 ஆகஸ்ட் 25இல் அருட்பணியாளர்களுக்கான வருடாந்தத் தியான இறுதிநாள் மதிய உணவு வேளையில் அருட்பணியாளர்கள் மத்தியில் "யாழ். மறைமாவட்டத்தை, ஆயர் எமிலியானுஸ்பிள்ளை பொறுப்பேற்கின்றார்" என்று ஆயர் கியோமர் அறிவித்தவுடனே, ஜே.எவ். சேவியர் அ.ம.தி., கியோமருக்கு நன்றி கூறினார் உடனே பேராலய மணிகள் முதல் சுதேச தமிழ் அ.ம.தி. ஆயரின் வரவின் செய்தியை மறைமாவட்ட மக்களுக்கு அறிவித்தன. 'கடந்து செல்லும் வரலாற்றின்' ஐரோப்பிய இறுதி யாழ். ஆயர் கியோமரின் 26 ஆண்டுகள் ஆளுகை முடிவில் 1950 யூலை 18இல் எமிலியானுஸ்பிள்ளை யாழ். மறைமாவட்டத்தின் ஐந்தாவது (முதல் மூன்று திருத்தூதுப் பதில் ஆயர்களுடன் சேர்த்து எட்டாவது) ஆயராகப் பொறுப்பேற்றார். இப்பொறுப்பேற்றலை 1950 ஆகஸ்ட் 25இல் அறிவிப்புச் செய்துவிட்டு அன்று மாலையே ஐரோப்பிய ஆளுகையில் இருந்து சுதேச ஆளுகைக்கு கையளித்த மனநிறைவுடன் வெளியேறிச் சில நாட்கள் இளவாலைக்குச் சென்று தங்கிய பின்பு வலித்தூண்டல் புனித அன்னா ஆலயத்தில் சிறிய அறைக்குத் தனது மிகுதிக் காலத்தைக் கழிக்கச் சென்றார். காலனித்துவ ஆட்சியின் யுகம் முடிந்து, இத்தீவு விடுதலை பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே ஐரோப்பிய மறையறிவிப்பாளர்களின் யுகமும் முடிவடைந்தது. யாழ். திருச்சபையும் சுதேச ஆயர் ஒருவரைப் பெற்று தன்னைத்தான் ஆளத் தொடங்கியது.

**காலத்தின் பணியாளர், மதிநுட்ப ஆலொசனையாளர்**

1958இல் இடம்பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து சிங்கள மக்கள் வடபகுதியிலிருந்து தென்பகுதிக்கும், தமிழ் மக்கள் தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கும் இடம்பெயரவேண்டியதாயிற்று. விசேடமாக இவர்களைக் குடியமர்த்த வேண்டிய தேவையும், மன்னார் பெருநிலப்பரப்பு, வன்னிப் பகுதியில் பின்தங்கிய இடங்களில் ஆலயங்களோடு பாடசாலைகளையும் இவர் ஏற்படுத்தினார். இவ்வாறு 1960 வரை பத்து வருடங்களாக இவர் பெரும் பணம், பொருள் செலவில் ஏற்படுத்திப் பராமரித்த பாடசாலைகளும், ஏற்கெனவே ஐரோப்பிய மறையறிவிப்பாளர்களினால் அமைக்கப்பட்டு இவரால் தொடர்ந்தும் பராமரிக்கப்பட்ட பாடசாலைகளும் 1961 ஜனவரி 23இல் தேசிய மயமாக்கப் பட்டன. ஆயினும் ஐந்து பாடசாலைகளை தொடர்ந்தும் அரசின் உதவியின்றி, 'வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடுவது போல்' என்னும் பல்வேறு விமர்சனங்கள், சிரமங்கள் மத்தியிலும் நடாத்தினார்.

ஐரோப்பிய மறையறிவிப்பாளர் காலத்தில் இருந்து வளர்ந்து வந்த நோவனைப் போட்டிகள், பொதுநிலையினரின் ஆதிக்கங்கள், இனமுரண்பாட்டுச் சண்டைகள், திருவிழாக் கேளிக்கைகள், வீண் ஆடம்பரக் களியாட்டங்கள், குருட்டுப் பக்திகள், செய்வினை, சூனிய, சாத்திர செயற்பாடுகள் போன்றவற்றால் விளைந்த தீமைகளில் இருந்து திருஅவையைப் புனரமைத்துப் புதுப்பித்துப் பகிரும் திருஅவையாக மாற்ற முயன்றார். திருவழிபாட்டு தமிழிசைப் பாடல்களின் அறிமுகமும் அர்த்தமுள்ள வகையில் வழிபடவைத்தமையும், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பே இவர் அமுல்படுத்த முயன்ற செயற்பாடுகளாகும். பாடசாலைகள் பறிபோன நிலையில் பங்குகளில் கத்தோலிக்க சூழலைப்பாதுகாக்க பங்கு மறைக்கல்விக்காக இல்லறத் தொண்டர்கள் அமைப்பை ஏற்படுத்தி, நிரந்தர மறைப்போதகர்களை உருவாக்கி பொதுநிலைத் திருத்தூதுச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தினார். ஏனைய மதங்களுடன் உரையாடல், பிரிந்துபோன பிராதான சபை -களுடன் ஒன்றிப்பு என்பவற்றை ஏற்படுத்தாமல் எதிர்காலத் திருஅவை மண்ணில் நிலைக்காது என்பதை அறிந்திருந்தார். இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பே இதை உணர்ந்து அவற்றின் தலைவர்களுடன் உறவுகளைப் பேணுவதில் இவர் ஈடுபட்டார்.

பொதுநிலையினரின் உருவாக்கத்திற்கு மேலாகக் காலத்திற்கேற்ற வேறொரு ஆணித்தரமான இவரது முயற்சி மிகவும் கூடிய தொகையில் மறைமாவட்ட அருட்பணியாளர் -களை உருவாக்கியதாகும். தானே அ.ம.தி. ஆயராக இருந்து கொண்டு உரோம் தனக்களித்த ஆணையின்படி மறைமாவட்ட அருட்பணியாளர்களைப் பல்வேறு எதிர்ப்புக்கள் மத்தியில், வகையிலும், தொகையிலும் உருவாக்கினார். சுதேசமயமாக்கலைச் செயற்படுத்த மறை மாவட்டச் சொந்தக்குருகுலமே அவசியமென்று இவர் அறிந்திருந்தார். சங்கத்திற்கு முன்பே தூரநேக்குடன் இவர் செயற்பட்டமை பல்வேறு விமர்சனங்களையும் தோற்றுவித்ததாயினும் அஞ்சவில்லை. சாதுரியத்துடன் இவர் அவற்றைச் செயற்படுத்தயமையின் பலனை நாம் இன்று அனுபவிக்கின்றோம்.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய சாரலம்

## அதிர்ச்சி - ஏற்படுவதற்கான காரணங்களும் முதலுதவியும்

திரு.ச.தேவசகாயம், நியூயோர்க் USA.

காயங்கள் அல்லது மனவெழுச்சி ஆகியவற்றின் போது மூளைக்குரிய குருதி விநியோகம் போதுமான அளவில் நடைபெறாததால், உடலின் செயற்பாடுகள் குறைக்கப்பட்டு, உடலின் உயிர்நாடியான இதயம், மூளை, சுவாசத் தொகுதிகள் பாதிக்கப்படும் நிலை அதிர்ச்சி எனப்படும். இந்த அடிப்படையில் உடலின் குருதி அமுக்கம் ஆபத்தான அளவில் குறைகிறது. அதிர்ச்சியின் கடுமையான தன்மை அந்த காயத்தின் இயல்பிலும், நோயாளி எவ்வளவு தூரம் காயப்பட்டுள்ளார் என்பதிலும் தங்கியுள்ளது. அதிர்ச்சி, மயக்க உணர்வு ஏற்படுவதிலிருந்து திடீரென ஏற்படும் மரணம்வரை வேறுபடும்.

அதிர்ச்சி ஏற்படுவதற்கு மிகவும் முக்கியமான காரணம் உடலில் வெளிப்புறமாகவோ அல்லது உட்புறமாகவோ ஏற்படும் குருதிப்பெருக்காகும். ஒருவரது உடலில் உள்ள குருதியில் ஐந்தில் ஒரு பகுதி குருதி அதாவது 1.2 லீற்றர் அல்லது இரண்டு பைந் அளவான குருதி இழக்கப்படும் போது அதிர்ச்சி ஏற்படலாம். அவ்வாறே எமது உடலில் உள்ள நீர் இழக்கப்படும் போது குறிப்பாக அதிகளவான வாந்தி, வயிற்றோட்டம், பெரியளவிலான எரிகாயம் ஏற்படுவதன் காரணமாகவும், எலும்பு முறிவு, மனிதனின் குருதிச் சுற்றோட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இதயத்தில் ஏற்படும் நோய் அல்லது மாரடைப்பு, உடலில் எற்படும் தொற்றுக்கள், இரத்தத்தில் சீனியின் அளவு குறைதல், ஒவ்வாமை, முள்ளந்தண்டு பாதிக்கப்படல் போன்ற பல்வேறு காரணங்களாலும் ஒருவருக்கு அதிர்ச்சி ஏற்படலாம்.

பொதுவாக முதலுதவியின்போது நோயாளியின் நோய் அறிகுறிகளை அவதானித்து அதற்கு ஏற்ப செயற்படுதல் என்பது மிகவும் முக்கியமானதாகும். அந்தவகையில் அதிர்ச்சி ஏற்பட்டவரில் ஆரம்ப நிலையில் பின்வரும் அறிகுறிகளை அவதானிக்கலாம்.

1. விரைவான நாடித்துடிப்பு காணப்படும்.
2. பாதிப்புக்குள்ளானவர் மிகவும் வெளிறி இருப்பார்.
3. தோல் குளிர்ந்து நன்கு வியர்த்துப் பிசுபிசுப்புத் தன்மை உடையதாயிருக்கும்.

**தொடர்ந்து அதிர்ச்சி அதிகரிக்குமாயின் மேற்குறிப்பிட்ட அறிகுறிகளுடன் பின்வரும் அறிகுறிகளையும் காணலாம்.**

❖ ஆழமானதும், விரைவானதுமான சுவாசம்.
❖ விரைவான நாடித்துடிப்பு. நாடித்துடிப்பினை மணிக்கட்டில் அழுத்திப் பார்க்கும்போது நாடித்துடிப்பு தெளிவாக உணர முடியாது இருக்கும்.
❖ உதடு, கை விரல் நகங்கள், காது சோணை போன்ற இடங்களில் அழுத்திய பின்னர் அவதானிக்கும்போது அவை மீண்டு பழைய நிறத்திற்கு வராது இருப்பதை காணலாம்.
❖ தலைசுற்று, மயக்க நிலை
❖ ஓங்காளம், வாந்தி, தண்ணீர்த்தாகம்
❖ அறிவிழந்த நிலை
❖ இறுதியாக இதயத்தொழிற்பாடு நின்றுவிடும்.

**இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு பின்வரும் முதலுதவி முறைகளை பின்பற்றுதல் வேண்டும்.**

♦ அதிர்ச்சி ஏற்பட்ட காரணத்தைப் பொறுத்து அதற்குரிய சிகிச்சையினை வழங்கவும் (குருதிப்பெருக்கு, எரிகாயம், எலும்பு முறிவு)
♦ தரையில் பாய் அல்லது தடிப்பான போர்வையினை விரித்து அதன்மேல் நோயாளியைப்படுக்க வைக்கவும். இதனால் தரையிலிருந்து ஏற்படும் குளிரிலிருந்து நோயாளியைப் பாதுகாக்க முடியும். நோயாளியின் தலை மற்றும் மார்புப் பகுதி தாழ்வாக இருக்குமாறு கால்கள் இரண்டினையும் உயர்த்தி உயரமான கதிரை அல்லது உயரமான பொருள் ஒன்றின் மேல் வைக்கவும். இவ்வாறு செய்வதன் மூலம் மூளை, இதயம், சுவாசப்பைக்கு தேவையான குருதியினை வழங்குவதுடன், நோயாளி மயக்க நிலைக்குச் செல்வதிலிருந்தும் பாதுகாக்க முடியும். அதே வேளை தேவையற்ற அசைவுகளைத் தவிர்க்கவும். தலை, மார்பு அல்லது வயிற்றில் காயம் இருப்பின் தோள்களை சிறிது உயர்த்தி ஆதாரப்படுத்தி தலையை ஒருபக்கத்திற்குத் திருப்பி விடவும்.
♦ நோயாளியின் கழுத்து, மார்பு, இடுப்புப் பகுதிகளில் இறுக்கமான ஆடை அணிந்திருப்பின் அதனை தளர்த்தி விடவும்.
♦ நோயாளியின் உடலில் ஏற்படும் குளிரைப் போக்குவதற்கு அவரின் கழுத்திலிருந்து கால்வரை போர்த்தி விடவும்.
♦ தொடர்ந்து நோயாளியின் சுவாசம் நாடித்துடிப்பினை பரிசோதிக்கவும். விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும்.


பெரும்பாலும் நோயாளிக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படலாம் என்பதனால் அவருக்கு உண்ணவோ அல்லது குடிப்பதற்கோ எதுவும் கொடுக்கக் கூடாது. தாகமாக இருப்பதாக கூறினால் சிறிதளவு நீரால் அவரது உதட்டினை நனைத்து விடவும்.

நோயாளியின் குளிரைப்போக்குவதற்கு சுடுநீரால் ஒத்தடம் கொடுப்பதை அல்லது நோயாளியின் கை அல்லது கால்களை தேய்ப்பதை செய்ய வேண்டாம்.

நோயாளியை தனிமையில் விட்டு விட்டுச்செல்ல வேண்டாம். எப்பொழுதும் துணைக்கு ஒருவரை அவருடன் இருக்குமாறு செய்த பின்னர் அவசர உதவி பெற செல்லவும்.

நோயாளி சுயநினைவு இழப்பாராயின் நோயாளியின் சுவாசப் பாதையினை திறந்து சுவாசத்தினைப் பரிசோதிக்கவும். சுவாசம் நடைபெறுமாயின் மயக்க மீள் நிலைக்குத் திருப்பி விடவும். சுவாசம் நடைபெறாது இருப்பின் உயிர்ச்சுவாசம் வெளி மார்பு அமுக்கத்தினைச் செய்துகொண்டு விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும். (இதனை முறையாகப் பயிற்றப்பட்டவர்களால் மட்டுமே செய்ய முடியும் என்பதை கருத்தில் கொள்ளவும்).●

# பல் கூச்சம் மற்றும் பல் சிதைவு போன்றவற்றிற்கான தீர்வு





குழந்தை பிறந்து எட்டு மாதம் கழித்து பற்கள் முளைக்கத் தொடங்கும். ஐந்து அல்லது ஆறு வருடங்கள் கழித்து இந்தப் பால் பற்கள் தானாகவே விழ ஆரம்பிக்கும். இது சிறுவ்யதில் அனைவருக்குமே பொதுவான ஒரு விஷயமாகும். ஆனால் நன்றாக வளர்ந்த சிலருக்கும் இந்தப் பிரச்சினைகள் இருக்கும். இது மிகவும் கவலை தரக் கூடிய விஷயமாகும். பற்கள் ஆட்டத்துடன் இருந்தால் எதனையும் சாப்பிடுவதற்கு கடினமாக இருக்கும். அந்த பல்லை சுற்றி உள்ள திசுக்கள், தசைகள் வீக்கத்துடன் இருக்கும். இதனை நாம் கவனிக்காமல் இருந்தால் அது நமக்கு பெரிய பிரச்சனையாக மாறிவிடும். இவ்வாறான பல் பிரச்சினைகளுக்கான தீர்வினை பற்றிதான் இந்த பதிவின் மூலம் தெரிந்து கொள்ளப் போகின்றோம்.

பற்களில் பிரச்சனை உண்டாக காரணங்கள்: பெரும்பாலும் பற்களின் ஈறுகளில் தோன்றும் வீக்கம் மற்றும் எலும்பு இழப்பு இவற்றின் காரணமாக தான் பல் தளர்வுகளும் பல் கூச்சங்களும் உண்டாகின்றன. அதுமட்டுமல்லாமல் சரியான வாய்வழி சுகாதாரத்தினை பின்பற்றாமல் இருந்தாலும் பலவித பல் பிரச்சனைகள் உண்டாகும்.

புகை பிடித்தல், மது அருந்துதல் இவற்றின் மூலமாக பற்களில் உள்ள எனாமல் எனும் மூலப்பொருட்கள் அழிந்து, பல் கூச்சம் மற்றும் பல் தளர்வு ஏற்படும். இந்த எனாமல் எனும் மூலப்பொருள் பற்களில் கவசமாக இருக்கும். இதற்கு பாதிப்பு ஏற்படும்போது நாம் பற்களை இழக்க நேரிடும். பற்கள் லேசாக ஆட்டம் செய்யும் போது, நாம் சரியான சிகிச்சை எடுக்காவிட்டால் பிறகு பெரும் பிரச்சனைகளை சந்திக்க நேரிடும்.

**பல் பராமரிப்பு:**

❖ தேங்காய் எண்ணெய், ஆலிவ் எண்ணெய், நல்லெண்ணெய் இவற்றில் ஏதேனும் ஒரு எண்ணெயை ஒரு ஸ்பூன் எடுத்துக் கொண்டு அதனை வாயினுள் வைத்து பற்களை சுற்றி நன்றாக கொப்பளித்து துப்ப வேண்டும். இவ்வாறு வாயினுள் எண்ணெயை வைத்துக் கொண்டு 10 அல்லது 20 நிமிடங்கள் கொப்பளித்து பின்னர் வெது வெதுப்பான சுடுநீரில் வாயினை சுத்தம் செய்ய வேண்டும். தினமும் இவ்வாறு காலையில் எழுந்தவுடனும், இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பாகவும் செய்து வர வேண்டும்.
❖ நெல்லிக்காய் பொடி ஒரு ஸ்பூன் எடுத்துக் கொண்டு அதனுடன் 1 கப் தண்ணீர் சேர்த்து நன்றாக கலந்து கொண்டு அந்த நீரினால் தினமும் ஒரு முறை வாய் கொப்பளிக்க வேண்டும். வாய் கொப்பளித்த பிறகு ஒரு மணி நேரத்திற்கு எந்த வித உணவுகளையும் சாப்பிடக் கூடாது. இவ்வாறு செய்து வருவதால் பற்களில் இணைப்பு திசுக்கள் உருவாகும். ஈறுகள் மற்றும் பற்கள் வலு பெரும்.
❖ இரண்டு பல் பூண்டினை சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொண்டு அவற்றை சேதமடைந்த பல் அல்லது தளர்வாக இருக்கும் பல்லுக்கும் கன்னத்திற்கும் இடையில் வைத்துவிட வேண்டும். முடிந்தவரை 1 நேரம் இதனை வைத்திருந்து பின்னர் எடுத்துவிடலாம். இவ்வாறு செய்து வந்தால் பல் பிரச்சனைக்கு காரணமாக தொற்றுக்களை அழித்து பற்களை வலுவாக்கும்.
❖ கடுகு எண்ணெய் மற்றும் தேன் சேர்த்து அதனை பிரச்சனை உள்ள பற்களை மீது தடவி வந்தால் பல் பிரச்சனை அகன்று விடும்.●

## சுவாசப் பிரச்சனைகளும் தீர்வு தரும் முத்திரை



இந்த முத்திரையை தினமும் செய்து வந்தால் வயிற்றுக் கோளாறுகள், செரிமானப் பிரச்சனை போன்றவற்றுக்கு சிறந்த தீர்வைப் பெற முடியும்.

**செய்முறை:-** விரிப்பில் நிமிர்ந்து அமரவும். முதுகெலும்பு நேராக இருக்கட்டும். கண்களை மூடி இயல்பாக நடக்கும் மூச்சை பத்து வினாடிகள் கவனிக்கவும். பின் பெருவிரலை உள்ளங்கையில் வைத்து மற்ற நான்கு விரல்களையும் படத்தில் உள்ளது போல் மடித்து இரு கைகளிலும் செய்யவும். இந்த முத்திரையில் இரு நாசி வழியாக மெதுவாக மூச்சை இழுத்து மிக மெதுவாக மூச்சை வெளி விடவும் பத்து முறைகள். பின் சாதாரண மூச்சில் இரண்டு நிமிடங்கள் இருக்கவும். காலை / மாலை சாப்பிடும் முன் இரண்டு நிமிடம் முதல் ஐந்து நிமிடங்கள் பயிற்சி செய்யவும்.

**பலன்கள்:-** நுரையீரலின் மேல்பகுதிக்கு ஆக்சிஜன் செல்ல உதவுகிறது. முறையற்ற சுவாசம் சரியாகும். அனைத்து சுவாசப் பிரச்சனைகளும் தீரும். தலை, கழுத்து, தோள், கைகள் மற்றும் விரல்களில் வரும் இறுக்கம் தளர்கிறது. மூளை மற்றும் தொண்டைப் பகுதிக்கு ரத்த ஓட்டம் சீராகப் பாயும். நரம்புகளைப் பலப்படுத்தும்.

வயிற்றுக் கோளாறுகள், செரிமானப் பிரச்சனை, உணவு உண்ட பின் மலம் கழித்தல், அடிக்கடி மலம் கழித்தல் சரியாகும். தோல், நாக்கு, கண், மூக்கு, காது ஆகிய ஐந்து புலன்களுக்கும் இழந்த சக்தியை மீட்டுத் தரும்.●

## எலும்புகளின் வளர்ச்சிக்கு உதவும் முளைக்கட்டிய பயறு சூப்



**தேவையான பொருட்கள்:-**

முளைக்கட்டிய பயறு (ஏதாவது 5 வகை) - அரை கப்

| | |
|---|---|
| வெங்காயம் | - 1 |
| வெள்ளைபூடு | - 3 பல் |
| சீரகம் | - அரை டீஸ்பூன் |
| எலுமிச்சைச் சாறு | - 1 டீஸ்பூன் |
| தேங்காய்ப் பால் | - கால் கப் |
| புளிக்காத தயிர் | - கால் கப் |
| மல்லி | - அரை டீஸ்பூன் |
| மிளகு | - சிறிதளவு |
| கொத்தமல்லிதழை | - சிறிதளவு |
| உப்பு | - தேவைக்கு |

**செய்முறை:-**

கொத்தமல்லிதழை, வெங்காயத்தை பொடியாக நறுக்கி கொள்ளவும். முளைக்கட்டிய பயறை வேகவைத்துக் கொள்ளவும். பின்னர் கொஞ்சம் வேகவைத்த பயறுடன், பூண்டு, வெங்காயம், மல்லி, சீரகம், மிளகு, கொத்தமல்லி தழை ஆகியவற்றை சேர்த்து மிக்சியில் நன்கு அரைத்துக் கொள்ளவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி அது சூடானதும் மிக்சியில் அரைத்த கலவையை போட்டு பச்சை வாசம் நீங்கும் வரை வதக்கவும். பின்னர் அதனுடன் மீதமுள்ள பயறு, உப்பு, தண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும். கொதிக்க தொடங்கியதும் தேங்காய் பால் சேர்த்து ஒரு கொதி வந்ததும் இறக்கவும். பின்னர் தயிர், எலுமிச்சை சாறு ஆகியவற்றை சேர்த்துக்கொள்ளவும். இறுதியில் கொத்தமல்லி தழை தூவி பருகலாம்.●

## வாசகர்களின் கவனத்திற்கு

**மன்னா பத்திரிக்கையில் ஆக்கங்களை விளம்பரங்களைப் பிரசுரிக்க விரும்பினால் அவற்றை குறித்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் களம்

## 41வது விழயலின் மன்னார் மறைமாவட்டம்!




நாற்றிசைகளிலும் நானிலம் போற்றிட
நற்பணிகள் பலவற்றை மாந்தருக்கு ஆற்றிட
நாயகன் இயேசு நாமம்தனை உலகெங்கும் சாற்றிட
நலமுடன் 41வது அகவையில் அடியெடுத்து வைக்கும் மன்னாரே!!!

நதிவளத்தையும், நந்தவனத்தையும் தன்னகத்தே கொண்டு
நாற்றிசை நாரைகளுக்கும் வாழிடம் இங்கு உண்டு
நல்லொழுக்கம் நற்பேறுகளை இம்மாந்தரிலே கண்டு
நாற்பது வருடமாய் இம்மண் எமக்காற்றிடுதே பற்பல தொண்டு!!!

நாடகம், நாட்டியம் ,நாட்டார்பாடல்களிலே நாட்டமாய்
நயனஞ்சேர் நாவல்கள் பலவற்றை விளைவிக்கும் தோட்டமாய்
நாளும் நயம்மிகு கலைகளை வளர்க்கும் கலைஞர்களுக்கு ஊட்டமாய்
நற்புகழுடன் 40 வருடங்களைக் கடந்த மறை மலர்ந்த மண்ணே!!!

நாடி வந்தோரை அரவணைக்கும் மருதமடு அன்னையின் இருப்பிடமாய்
நம்பிக்கையின் நங்கூரங்களான தேவசாட்சிகளின் பிறப்பிடமாய்
நாட்டின் புனிதராம் புனித யோசவ்வாஸ் முனீந்திரனின் தரிப்பிடமாய்
நட்புடனே மறையைப் பரப்பிய புனித சவேரியாரின் வசிப்பிடமான
மாசற்ற மன்னார் மண்ணே!!!



நற்றவம் செய்த இம்மண்ணில் பிறந்ததே எமக்குக் கிடைத்த முதம் வரம்
நாற்பது ஆண்டுகளாய் எம்மைத் தாங்கியமைக்குத் தாழ்த்துவோம் நாம் சிரம்
நாளும் பொழுதும் 40 வருடமாய் நீர் சுமந்தீரே சுமமான பாரம் - ஆதலால்
நன்றியுடன் எம் நெஞ்சில் இன்னும் வற்றவில்லை ஈரம்

நவரத்தினங்களை ஈறெடுத்து ,மேலும் உம் பணி தொடரட்டும்!
நானிலம் முழுவதும் உம் புகழ் விரைவாகப் பரவட்டும்!
நல்லாயன் இயேசுவைப் பின்பற்றி இம்மண்ணிலுள்ளோர் வாழ்வு மலரட்டும்!
நாற்பத்தொன்றாவது வருடத்தை நோக்கி வீறுநடைபோடும் எம் மன்னார் மறைமாவட்டமே!!!
வீரமுடன் உன் புகழைச் சுமந்து வா!!!
வீறுநடைபோட்டு இறையாசீரோடு விரைந்து வா!!!

**அபிஷானி ஜெனிங்ஸ்**
**24/7இ குழந்தையேசுபுரம் மன்னார்.**

## சுதந்திரம்

நிலத்தட்டில் சறுக்கல்கள் வானங்கொட்டும்
நெடும் மழையின் தாக்கம் வெள்ளம் மட்டும்
விலைவாசி ஏற்றங்கள் வீட்டில் பஞ்சம்
விலக்கு மொழியாய் மலர்ந்த சுதந்திரமே

உறவுகளைப் பிரிந்தவர்கள் ஒன்றுகூட
உவகையுடனவர் மகிழ்ந்து சிந்து பாட
அறந் தொலைந்த அசுரர்களின் தொல்லை நீங்க
ஆருஞ்சுடராய் மலர்ந்த தீப நாளே

மதுவருந்தி மாழ்பவர்கள் திருந்தி வாழ
மங்கையரை இம்சிப்போர் மனசு மாற
புதுவுலகு சிருட்டிக்குமிளையோர் நெஞ்சில்
புத்தொழியைப் பாய்ச்சிட வந்த புது நாளே

களனியிலே பாடுபட்டு முழவ மக்கள்
கடிய மலை நாட்டினிலே உழைக்கும் மக்கள்
சூழல் பொங்கு கடலோடி மீன் கொணர்வோர்
துயரிருளைப் போக்கிட வந்த புனித நாளே

வறுமையெனும் கொடு நெருப்புள் உலகப் பந்தில்
வாடி வறுபட்டுளலும் ஏழை மாந்தர்
நறுமணமா மலர் வாசம் இன்பங்கண்டு
நலம் பெறவே அருள் கொணர்வாய் தீபநாளே

**பி.செருஜன் றெவ்வல்**
**8ம் வட்டாரம், பேசாலை**

## “வரப்புயர”

இயற்கைப் பசளையிட்டு விவாசயம் செய்ய
எங்களுக்கும் விருப்பம்தான்
பொருட்களை அடகு வைத்து
செயற்கை உரம் வாங்க எங்களுக்கென ஆசையா?
“பசுமைப் புரட்சி” எங்களுக்கும் பிடித்தம் தான்
“யூறியா இல்லையென்றால் பச்சையாக மாட்டோம்
மஞ்சளாள்த்தானிருப்போம்” என்று
மஞ்சள் புரட்சி செய்கின்றனவே நெற்பயிர்கள்
என்ன செய்வது?
ஒருபோக வேளாண்மையில் பரீட்சார்த்தம்!
பட்டினிக்கு யார் பொறுப்பு?
“மனைவி நலமா? மக்கள் நலமா?”
என்பதெல்லாம் இன்று கேள்வியில்லை
“உரம் போட்டாயிற்றா”? இதுவே கேள்வி
நினைத்தபடியெல்லாம் விற்கப்படுகிறது கிருமிநாசினி
கேட்கப் பார்க்க யாருமில்லை
எருக்கலை இலைகளுக்கு நோய்கள் கட்டுப்பட்ட
காலம் ஒன்று இருக்கத்தான் செய்தது
இப்போது அப்படி இல்லையே!
வாழ்வாதாரத்திற்கு எதுவுமே இல்லை
வயலைத் தவிர!
வானம் பொழிகிறது பூமிதான் விளையவில்லை
மன அழுத்தத்தில் மாண்டு கொண்டிருக்கிறோம் விவசாயிகள்
“வரப்புயர” வாழ்த்திய எங்கள் தமிழ் மூதாட்டியே!
நீரும் உயர்வாய்த்தான், நெல்?

**ஜெயா பாலாஜி - முருங்கன்.**

## “மாந்தையின் ஆட்சிராணி”



மன்னார் மறைமாவட்டம்
மகிழ்வு கொள் உயர்பதி
மாந்தர் நாம் நிறைவுகொள் திருப்பதி
அன்னை மரியாள் வாழும் நல்ல உயர்பதி

மாந்தை என்னும் மாபதியின்
அருள் மழையின் ஆட்சி ராணி
அல்லல் படும் எம்மவர்க்கு
அருள் புரியும் தூய கன்னி

அகிலம் போற்றும் மடுப்பதியின்
அன்னைமரி வாழ்ந்து வந்த தூயபதி
தீயவர்கள் ஆட்டங்களை
ஓட்டம் காண செய்த மரி

சத்தியத்தின் மறையதனை
சாகடித்து முடிப்போமென்று
சட்டம் போட்ட வேந்தரைத்தான்
சரணடைய வைத்த பதி

ஏந்தலர்கள் எப்படிதான் எண்ணினாலும்
எம் மறையின் அன்னை தூய கன்னிமாமரியே!
உந்தனது பாதம் வந்தால்
துன்பமெல்லாம் பறந்தோடும் தூய தாயே!

**சி. [illegible] - [illegible] பங்கு**

## மன்னாவே உன்னை வாழ்த்துகின்றேன்

மன்னாரின் பணிதனை மாண்புடனே
மக்களுக்காய் மனமுடனே பணி புரியும்
மன்னாவே உனக்கு என் மனமாற வாழ்த்துக்கள்
பல்வேறு பணிதனை பல்வேறு அம்சங்களுடன்
வெளி வந்து கொண்டு இருக்கின்றாய்
ஆலமரம் எவ்வாறு கிளைகளைப் பரப்பி
நிழல் தனைக் கொடுக்கின்றதோ அதேபோல்
மன்னாவாகிய நீயும் மக்களிற்கு உணவு அளிக்கின்றாய்
அன்று மக்களுக்கு மன்னாவை ஆண்டவர் பொழிந்தார்
இன்று கிறிஸ்தவ மக்களுக்காக மன்னா பொழிகின்றது
அழகான அம்சங்களுடன் தேன் போல தித்திக்க
பல்வேறு உணர்வுகளுடன் – மாதம்
ஒரு முறை எமக்கு தருகின்றாய் – வாழையடி வாழையாக
உள்நாட்டில் மட்டுமல்ல வெளி நாட்டிலும்
உன் பணி மென்மேலும் புதிய அம்சங்களுடன் தொடர
வாழ்த்தி விடை பெறுகின்றேன்
வாழ்க மன்னாவின் பணி
தொடரட்டும் மன்னாவின் சேவை

## பங்குத்தந்தையர்களுக்கு...

**தங்களது பங்குகளில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகள், திருவிழாக்கள் தொடர்பான விடயங்களை மன்னாவில் பிரசுரிக்கும் பொருட்டு எமது மன்னா மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**
**நன்றி - மன்னார நிர்வாகம்**

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் :
Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் :
The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் :
S/A No. 02002029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.228
## புலம்பல் (அதிகாரம் 17 முதல் 24 முடிய)

உங்கள் விடைகளை பங்குனி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | ✱ | | | | 04 | |
| | | 05 | | | | | | 06 | | |
| | | ✱ | 07 | | | | | | | |
| | 08 | | | | | | 09 | | | |
| | | 10 | | | | | | | | |
| | | ✱ | 11 | | | | | | | |
| 12 | | | | | | | | | | |
| | | 13 | ✱ | | | | | 14 | | |
| | ✱ | | ✱ | 15 | ✱ | | | | 16 | |
| | | | | | | 17 | | | | 18 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்
1. எகிப்தின் தெய்வச்............................ உங்களைபே தீட்டுப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
3. கையில் பிடிப்பதற்காகவே அவ்வாள்......................... வைக்கப்பட்டுள்ளது.
5. நான் என் பெருஞ்சினத்தை உனக்கு ......................... திருப்புவேன்.
7. உன் நடத்தைக்கு.......................... உன் செயல்களுக்கு ஏற்பவும் நீ தீர்ப்பிடப்படுவாய்.
8. அழகிய மகுடங்களை அவர்கள் தலையில் ...............கள்.
10. இது வேறிடத்தில் நடப் ...........................செழிக்குமா?.
11. நான் தூயவர் என்பது உங்கள் ............................. வேற்றினத்தார்க்கு வெளிப்படும்.
12. எனக்கெதிராக நீங்கள் இழைத்த........................... அனைத்தையும் விட்டு விடுங்கள் (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)

### மேலிருந்து கீழ்
1. பாலை நிலத்திலேயே என் ஆத்திரத்தை அவர்கள் மேல் கொட்டி என் ...........................த் தீர்த்துக் கொள்வேன்.
2. முழங்கால்களெல்லாம் ........................... அலம்பும்.
4. கொடுத்ததற்கு மேலாய்ப் ....................... அடுத்திருப்பவனை ஒடுக்குகிறாய்.
6. அது .................. தாழ்ந்து படரும் திராட்சைக் கொடியாயிற்று.
8. களிம்பு காய்ந்து உருகும் வரை அது..................... (3ம் 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
9. பிள்ளைகளின் ..........................என்னுடையதே.
12 வேற்றினத்தார் அதனைப்பற்றி கேள்வியுற்று அதனைப் படு .................. வீழ்த்தினர்.
13. அவர்களது குற்றம் மறைக்கப்படாமல் அவர்கள் ................. பிடிக்கப்படுவர்.

### வலமிருந்து இடம்
2. ஏனெனில் என் .......................... அவர்கள் ஒதுக்கி விட்டனர்.
4. நீ படைக்கப்பட்ட ஊரில் நீ..................... மண்ணில் நான் உன்னைத் தீர்ப்பிடுவேன்.
6. ஒவ்வொரு........................ அதிலிருந்து எடு.
9. பெற்றோரின் ........................... என்னுடையது.
14. ........................ யெல்லாம் உன்முகம் திருப்பப்படுகிறதோ அங்கெல்லாம் காட்டு.
16 அதன் கிளைகளின் ...................களில் அவை வந்து தங்கும்.
17. என்.......................... ஒதுக்கி விட்டார்கள்.
18. அது சினத்தோடு பிடுங்கப்பட்டு .................... எறியப்பட்டச

### கீழிருந்து மேல்
8. அவர்களைச் .............வரும் படுகொலைக்கான வாள் அது.
11. நெருப்பு.......................... இறைச்சியை நன்கு வேகவை.
12. தந்தையின் ....................... மகன் ஏன் சுமக்கக் கூடாது.
14. அது உன்னிலிருக்கும் எல்லாப் பச்சை மரங்களையும் பட்ட மரங்களையும் ........................விடும். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
15. மின்னலென ஒளிர்வதற்கென அ....................ப் பட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
16. உங்கள் மனத்தில் எழும் எண்ணம் .....................ப் போவதே இல்லை.
17. செழிப்பு ....................இது நடப்பட்டது. (3ம், 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
18. நேரியவர் தம் நேரிய நடத்தையினின்று விலகி................ பொல்லாரைப் போல வெறுக்கத் தக்கவற்றையெல்லாம் செய்தால் அவர்கள் வாழ்வரோ.

### விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 226 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ஞா.வினோதர்சி
முதலைகுத்தி

**இரண்டாம் பரிசு:**
நீ. நிலவரசி
அந்தோனியார் புரம்

**மூன்றாம் பரிசு:**
M. பிளண்ரீனா
மன்னார்

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 43 பேர். சரியான விடைகளை எழுதியோர் 41 பேர்.**

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.226ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. யோ. யூடிற்டலிமா - வங்காலை
2. J. இருதயமேரி - ஆசிக்குளம்
3. K.R. கலிஸ்ரஸ் - ஆசிக்குளம்
4. J.N. சுவிற்சலா - பறப்பாங்கண்டல்
5. ச. டவ்ஷன் - நானாட்டான்
6. அகுஸ்தீன் இசக்கியேல் - யோசவாஸ் நகர்
7. R. சறோஜினி - யோசவாஸ் நகர்
8. ச. டிலுக்சன் - சூரியகட்டைக்காடு
9. அ. ஜஸ்மின் - ஷறோன் ஆவணம்
10. ச. மரிய கொண்சிக்கா குரூஸ் - சவேரியார் புரம்
11. S. செபமாலை மார்க் - வங்காலை
12. E.A. ஜான்சி - நானாட்டான்
13. R. எமி பிகிறாடோ - பள்ளிமுனை
14. T. றேச்சல் - பள்ளிமுனை
5. T. ரேறியன் - பள்ளிமுனை
16. R. ஜெயநாதன் - மடுக்கரை
17. கி. மேரி ஜீவிதுரம் - தலைமன்னார் கிராமம்
18. P. கிறேஷியன் கூஞ்ஞ - தலைமன்னார் கிராமம்
19. யோ. யூடிற் டலிமா - வங்காலை
20. கி. எபிக்ஷன் கூஞ்ஞ - தலைமன்னார் கிராமம்
21. லிவி பிகிறாடோ - பள்ளிமுனை
22. குணமணி - மன்னார்
23. அபிஷானி ஜெனிங்ஸ் - மன்னார்
24. ஜெனிங்ஸ் ஜெசிமன் - மன்னார்
25. எய்லின் ஜெஷானி - மன்னார்
26. H. றக்ஷிதன் - மன்னார்
27. ச. மேரி விவேக்கா - அடம்பன்
28. தே. கிஷோனிகா - நானாட்டான்
29. அ. யூடிற் அனுசியா - வங்காலை
30. P. மதுமிலா - வங்காலை
31. அ. அன்ரனிஸ் குரூஸ் - வங்காலை
32. அ. கில்டா - மடுவீதி
33. அ. அஜித்தா டலிமா - வங்காலை
34. வி. ஜெனிவாறோஸ் - வளன்நகர்
35. D.P. டக்ஷன் - மாவிலங்கேணி
36. D.P. சாறா - மாவிலங்கேணி
37. எ. ஜெய்மன் முருங்கன்
38. எ. ஜெனோலின் முருங்கன்

3ம் பக்கத் தொடர்ச்சி
### பூலார் குடியிருப்பு புனித பவுலடியார்...

ஆரம்பத்தில் தலைமன்னார் பங்குடன் இணைந்திருந்த புனித பவுலடியார் ஆலயம் 2000ம் ஆண்டு கீளியன் குடியிருப்பு பங்கு ஏற்படுத்தப்பட்டதுடன் கீளியன்குடியிருப்பு பங்கிற்கு உட்பட்ட ஆலயமாக இணைத்துக் கொள்ளப்பட்டது. இடிபாடுகளுடன் காணப்பட்ட தூய பவுல் அடியார் ஆலயத்தை மீளவும் புதிதாகக் கட்டியெழுப்பும் வகையில் எமது பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி ஜெஸ்லி ஜெகானந்தன் அடிகளாரின் அயராத முயற்சியாலும், தியாகம் நிறைந்த பணியினாலும் 17.12.2018 அன்று ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பழமையைப் பேணிப் புதிய அழகு வேலைப்பாடுகளுடன் இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அருட்பணி ஜெஸ்லி ஜெகானந்தன் அடிகளார் உரோமாபுரிக்குச் சென்று புனித பவுலடியாரின் திருச் சுருபத்தை பெற்று வந்ததுடன் போலந்து நாட்டிலிருந்து புனித பௌஸ்ரினாவின் திருப்பண்டத்தை இவ்வாலயப் பெயரிலேயே பதிவு செய்து பெற்று வந்து இவ் ஆலயத்தில் வைத்துப் பேணி இறைஇரக்கப் பக்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெள்ளிக்கிழமைகளில் இறைஇரக்கம், நற்கருணை ஆராதனை, திருப்பலி என்பன மேற்கொள்ளப் படுவதுடன் மாதத்தின் முதல் வெள்ளிக் கிழமைகளில் இறைஇரக்கம், நற்கருணை ஆராதனை, திருப்பலி, குணமாக்கல் வழிபாடு, திருவிழிப்பு என்பன இடம்பெற்று வருகின்றது. அத்தோடு முதல் சனிக் கிழமைகளில் குழந்தைச் செல்வம் இல்லாதவர்களுக்கான விசேட வழிபாடுகளும் இடம் பெறுகின்றது. பிற இன, மத சகோதரர்களும் அதிகமாக வருகின்ற ஆலயமாக இவ்வாலயம் திகழ்கின்றது.

**பூலார்குடியிருப்பு ஆலய மக்கள்**

3ம் பக்கத் தொடர்ச்சி
### வவுனியா மருக்காரம்பளை புனித...

தொடர்ந்து கலைநிகழ்வும், ஆண்டகை ஆயர் தந்தை அவர்களையும், மற்றும் அருட்தந்தையர்கள், மற்றும் ஆலய கட்டுமானத்திற்கு உதவி புரிந்தவர்கள் அனைவரையும் பாராட்டும் நிகழ்வும் நடைபெற்றது. இவ்விழாவினை ஒழுங்குபடுத்தி தேவையான ஆயத்தங்களை செய்து ஒத்துழைப்பு வழங்கி நிறைவேற்றிய பங்குத்தந்தை, உதவிப் பங்குத்தந்தை, அருட்சகோதரர், அருட்சகோதரிகள், பொதுநிலைப் பணியாளர்கள், இறைமக்கள் அனைவருக்கும் வவுனியா கத்தோலிக்க ஊடகத்தின் சார்பாக இதயபூர்வமான நன்றிகளையும். இனிய நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் அன்னையின் ஆசியும் அருளும் உண்டாவதாக

3ம் பக்கத் தொடர்ச்சி
### மாந்தை லூர்து அன்னை ஆலய...

தந்தையோடு இணைந்து மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி P.கிறிஸ்துநாயகம் அடிகளாரும் மாந்தை பங்குதந்தை அருட்பணி அமல்றாஜ் குரூஸ் அடிகளாரும் மற்றும் பல அருட்பணியாளர்களும் இணைந்து திருப்பலியினை ஒப்புக் கொடுத்திருந்தனர். மேலும் அருட் சகோதரிகளும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் மற்றும் அரச அரச சார்பற்ற உறுப்பினர்களும் இணைந்து சிறப்பித்திருந்தார்கள்.

திருவிழாவினை ஒழுங்குபடுத்தி தேவையான ஆயத்தங்களைச் செய்து ஒத்துழைப்பு வழங்கிய பங்குதந்தை கிராம மக்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் அனைவருக்கும் இதய பூர்வமான இனிய திருவிழா நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

1ம் பக்கத் தொடர்ச்சி
### மன்னார் புனித செபஸ்ரியார்...

திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் தலைமை தாங்கி சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டது. மேலும் மூன்றாவது திருப்பலியானது மாலை 05 மணியளவில் திருச்செபமாலையுடன் அருட்பணி சீ. அல்பன்ராஜ் அடிகளாரினால் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மேலும் மன்னார் புனித காணிக்கை அன்னை ஆலயத் திருவிழாவானது 02.02.2022 அன்று மூன்று திருப்பலிகளாக நடைபெற்றது. முதலாவது திருப்பலியானது காலை 05.30 மணிக்கு திருச்செபமாலையுடன் பங்குதந்தை (அருட்பணி. இ. அகஸ்ரீன் புஸ்பராஜ் அடிகள்) தலைமையில் உதவிப் பங்குதந்தையர்களும் இணைந்து ஒப்புக் கொடுக்கப்பட்டது. இரண்டாவது திருப்பலியானது காலை 7 மணியளவில் திருச்செபமாலையுடன் கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

திருப்பலியினை அருட்பணி எமிலியானுஸ் பிள்ளை (ஆயரின் சிறப்பு பணி முதல்வர் மற்றும் மன்னார் மறைமாவட்ட குடும்பநல பணியக இயக்குனர்) அவர்களினால் தலைமை தாங்கி சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டது. மேலும் மூன்றாவது திருப்பலியானது மாலை 05 மணியளவில் திருச்செபமாலையுடன் அருட்பணி P.பிரசாந்தன் அடிகளாரினால் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

1ம் பக்கத் தொடர்ச்சி
### அமல மரித்தியாகிகள் சபையின்...

இவ் ஜுபிலி ஆண்டின் ஆரம்ப நிகழ்வானது யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்களோடு அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாண முதல்வர், கொழும்பு மாகாண அமலமரித் தியாகிகள் சபையின் முதல்வர், மற்றும் குருமுதல்வர், ஏனைய துறவற சபையின் முதல்வர்கள் குருக்கள், துறவிகள், பொதுநிலை பணியாளர்-களோடும் இணைந்து இப்பலியை ஒப்புக்கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தங்களது ஜுபிலி ஆண்டைக் கொண்டாடும் அமலமரித் தியாகிகள் இத்தனை வருடங்களாக திருஅவையின் நம்பிக்கை வாழ்வுக்காக போராடி உழைத்து நின்ற அனைத்து அமலமரித் தியாகிகளையும் நினைந்து நன்றி உணர்வோடு பெருமிதம் கொள்கின்றனர். இவர்கள் பணியும் வாழ்வும் மென்மேலும் சிறக்க இவர்களை வாழ்த்தி ஆசித்து நிற்கின்றோம்.

1ம் பக்கத் தொடர்ச்சி
### மன்னார் மறைமாவட்ட ஆயர்...

1969ம் ஆண்டு (ஆவணி மாதம்) இத்தாலியில் இறையியல் கற்கைநெறியைத் தொடர்ந்ததுடன் 1974ம் ஆண்டு இறையியல் முதுமானிப் பட்டத்தையும் பெற்றார். இவர் 1973ம் ஆண்டு தை மாதம் 6ம் திகதி பரிசுத்த பாப்பரசர் புனித 6ம் பவுல் அவர்களினால் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். பின் 1978ம் ஆண்டு தேசிய குருமடத்திலே பேராசிரியராகப் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து 1989-1991ல் உதவி அதிபராகவும் 1991-1998 இல் அதிபராகவும் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்திலே பணியாற்றினார். பின்பு 2011ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி கொழும்பு உயர் மறை மாவட்டத்திற்கு உதவி ஆயராக நியமிக்கப்பட்டதுடன் 2017ம் ஆண்டு கார்த்திகைமாதம் 22ம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயராகவும் நியமிக்கப்பட்டார். எனவே ஆயராக திருநிலைப் படுத்தப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவினைக் கொண்டாட விருக்கும் எமது பேரன்பிற்குரிய ஆயர் தந்தை அவர்கட்கு மன்னாப் பத்திரிகை சார்பாக நன்றிகளையும் பாராட்டு-களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 ✝ 07 ✝ 1939



இறப்பு 27 ✝ 02 ✝ 2020

### திருமதி. இயேசுதாசன் மரியம்மா


(பரிகாரிகண்டல், முருங்கன்)

இல்லத்தில் நீ ஒளிவிளக்காய்! உள்ளத்தால் உயர்ந்தவராய்!
குடும்பத்தாருக்கு குலவிளக்காய்! உலகோர் போற்ற வாழ்ந்த - தாயே!
என்றும் எம் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கும் - அம்மா!
ஈராண்டுகள் கடந்தாலும் பாசத்தில் பழகுவதில்
எம்மை உரமூட்டி வளர்த்து விட்டு பண்பாய் வாழ்வதையும்
எங்களுக்கு கற்றுத் தந்துவிட்டு சென்றீர்களே - அம்மா!
என்றுமே ஓயாது உங்கள் நினைவலைகள்
மாறாது உங்கள் மேல் வைத்த அளவுகடந்த பாசம்
ஆண்டவரின் அமைதியில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்: குடும்பத்தினர்

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 ❖ 05 ❖ 1955



உதிர்வு 02 ❖ 02 ❖ 2012

### திரு. செபஸ்ரியான் மரியதாசன்

(வஞ்சியன்குளம்)

பல்லாண்டு காலம் எமை பாசத்தால் வழிநடத்தி
பத்தாண்டுகளாய் நீங்கள் எமை பாதியில் விட்டு சென்றீர்
அப்பா என்ற வார்த்தை அசரீரியாய் எம் காதில்
அனுதினம் ஒலிக்கும் ஓசை கேட்டு அழுகின்றோம் உம் சேய்கள் நாங்கள்
வல்லமை வலிமை தந்து வாழ்ந்திட உறுதி தந்து
வானிலே இருந்து கொண்டு வாழ்வீர் எம் உயர்வு கண்டு
"ஆன்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்"

பிரிவால் துயரடையும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரக் குழந்தைகள்

## 12, 12 ½ ஆம் ஆண்டு நினைவஞ்சலி





திறினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு)
மலர்வு : 29.04.1952
உதிர்வு :08.02.2010

ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)
மலர்வு : 27.08.1945
உதிர்வு :06.08.2009


[கொன்வென்ட் வீதி, மன்னார்.]

'இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம். ஆகவே நீ எமக்கே சொந்தம்"

அன்பான தெய்வங்களே!
எம்மைவிட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் ஆனாலும்
எம்மை விட்டு நீங்காது உம் நினைவு.
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்,
சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார்,உறவினர், நண்பர்கள்.
தகவல்: கசியன் பிலிப்புப்பிள்ளை, லண்டன்.

## 20ம், 34ம் ஆண்டு நினைவஞ்சலி





திரு. பேதுரு எஸ்தாக்கி
பிறப்பு : 1930.09.03
இறப்பு : 2001.02.17

திருமதி. எஸ்தாக்கி பிரான்சிஸ் அம்மா
பிறப்பு : 1938.08.22
இறப்பு : 1988.02.25

(பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்)

நினைவில் நீங்கா உங்கள் நினைவு சுகங்களுடன்
நகர்ந்து செல்லும் எம் வாழ்க்கைப் பாதை...
வருடங்கள் பிரிவுத்துயரின் துன்பத்தில் எம்மோடு இருபது,
முப்பத்துநான்கு ஆண்டுகள் ஆனாலும் வாழ்கிறீர்கள்.
அன்பாய், அக்கறையாய், துணையாய், துயர் துடைக்கும்
கரமாய் தூக்கி நிறுத்தும் உங்கள் அமைதியான
மன உறுதியில் நாமும் புதிய வலிமை பெறுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்
பிள்ளகைள், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்

## 42ம், 11ம் ஆண்டு நினைவஞ்சலி





திரு. மரிசால் செபஸ்தியான்
மலர்வு : 1910.04.13
உதிர்வு: 1980.03.10

திருமதி. செபஸ்தியான் அன்னம்மா
மலர்வு : 1917.04.10
உதிர்வு: 2011.01.04

(பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்)

ஆண்டுகள் பல கரைந்து மறைந்தன ஆயினும்
நீண்டு செல்லும் உங்கள் இனிய நினைவுகள்.
உங்கள் ஒவ்வொரு சொல்லும். செயலும்
எம்மை விட்டு நீங்காது.
நீங்கள் என்றும் எம் கண்முன்னே பிரதிபலித்து
நிற்கின்றீர்கள்.

பிரிவால் துயருறும்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

4ம் பக்கத் தொடர்ச்சி

### நீதியான சமுதாயத்தை...

வேலை என்பது மனிதனுக்கானதே ஒழிய, மனிதர் வேலைக்கு அடிமைப்பட்டவர் அல்ல என்பதை வலியுறுத்தும் இவ்வவை, மனிதகுல வளர்ச்சிக்காகப் பணியாற்ற வேண்டிய மனிதரின் கடமையையும், தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும் பணியாற்ற இருக்கும் மனிதரின் உரிமையையும் சுட்டிக்காட்டியுள்ளது

வேலைவாய்ப்பற்றவர்கள் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படு -கிறார்கள் என்ற பின்னணியில், குடிபெயர்ந்தோர், மற்றும் புலம்பெயந்தோர் நிலைகுறித்து நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது மனிதகுல ஒருங்கிணைத்த வளர்ச்சிக்கான திருப்பீட அவையின் அறிக்கை.

கோவிட் பெருந்தொற்று, வேலை வாய்ப்புகளில் ஏற்படுத்தியுள்ள பெரும் இழப்பை ஈடுசெய்யும் வழிகள் குறித்து திருப்பீடத்தின் கோவிட்-19 அவை, உலகிலுள்ள கதோலிக்க அமைப்புகள் வழி எடுத்துவரும் நடவடிக்கைகளையும் சுட்டிக்காட்டும் இவ்வவை, உடன்பிறந்த உணர்வு நிலை ஆதரவு, நவீன அடிமைத்தன எதிர்ப்பு போன்றவற்றின் வழியாகப் பல பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்பதையும் வலியுறுத்தியுள்ளது.●

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

4ம் பக்கத் தொடர்ச்சி

### முதியோருக்கு சிறப்பு நாள்...

வாழ்விலும் விசுவாசத்திலும் முதியோர் அடைந்துள்ள அனுபவங்கள், சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கு உதவ முடியும். திருஅவையின் ஒன்றிணைந்த பாதையில் இது மிக முக்கியத்துவம் நிறைந்தது என்பதையும் சுட்டிக்காட்டி உள்ளது. திருஅவையின் அனைத்து மறைமாவட்டங்களும், பங்குத்தளங்களும், அமைப்புகளும், சமுதாயங்களும் இச்சிறப்பு தினத்தை யூலை 24ம் திகதி ஞாயிறன்று நல்ல முறையில் கொண்டாட வேண்டும் என்றும், அதற்குத் தேவையான வழிகாட்டிகளையும் விபர ஏடுகளையும் விரைவில் வழங்கவுள்ளதாகவும், திருப்பீடத்தின் பொது நிலையினர், குடும்பம், மற்றும் வாழ்வு அவை தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.●

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

3ம் பக்கத் தொடர்ச்சி

### அப்போஸ்தலிக்க கார்மேல் சபை...

இவர்களில் அருட்சகோதரிகள் மரிய யூலியற் சிந்துஜா தேவகி ஆகியோர் எமது மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவ் அருட்சகோதரிகளை வாழ்த்துவதோடு இவர்களது பணி சிறக்கவும் எங்களது செபங்களையும் ஆசிகளையும் மன்னா சார்பாக தெரிவிக்கின்றோம்.●

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

2ம் பக்கத் தொடர்ச்சி

### போர்டோவின் திருக்குடும்ப...

திருக்குடும்ப துறவற சபை அருட்சகோதரிகளின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்ற இச்சிறப்புத் திருப்லியில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அவர்கள் அமலமரித் தியாகிகள் சபை யாழ். மாகாண முதல்வர் அருட்திரு யூயின் பெனடிக்ற் அவர்களும் மற்றும் ஏனைய குருக்களும் அருட்சகோதரிகளும் திருக்குடும்ப சபை அங்கத்தவர்களும் இணைந்து கொண்டனர். திருப்பலியை தொடர்ந்து நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெற்றது.●

2ம் பக்கத் தொடர்ச்சி

### குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழா...

அருட்பணி டேவிட் டொமினிக் சகாயம் அடிகளார்மேலும் இவ் வெள்ளிவிழா கொண்டாட்டத்திற்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை வருகை தந்து சிறப்பித்தத்தோடு ஏனைய பங்கின் பங்குத்தந்தையர்கள், உதவிப் பங்குத்தந்தையர்கள், அருட் சகோதரர்கள், அருட்சகோதரிகள் பொதுநிலைப் பணியாளர்களும் கலந்து விழாவினை சிறப்பித்திருந்தார்கள்.

தொடர்ந்து கலை நிகழ்வும், ஆண்டகை அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், மற்றும் அருட்தந்தையர்கள் கௌரவிக்கும் நிகழ்வாக பொன்னாடை அணிவிக்கப்பட்டது. வெள்ளி விழாவினைக் கொண்டாடும் அருட்தந்தை அவர்களுக்கு நல்வாழ்த்துகளை கூறுவதோடு, தொடர்ந்து அவரது பணிவாழ்வு சிறக்க இறைவன் தாமே முன்னும் பின்னும் இடமும் வலமுமாக இருந்து காக்க மன்றாடுகின்றோம்.●

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

3ம் பக்கத் தொடர்ச்சி

### நானாட்டான் டிலாசால் கல்லூரியின்...

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்டத்தின் மூன்று ஆயர்களின் பெயர்களிலே திறன்வகுப்பறைகள் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்.

இத்திறன் வகுப்பறைகளை அப்பாடசாலையின் முன்னாள் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திரு. P. லூர்து புவனம் அவர்களும், UK பழைய மாணவர்களும் அதிவந்தனைக்குரிய ஆயர்களின் பெயர்களில் அன்பளிப்பு செய்தமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.●

2ம் பக்கத் தொடர்ச்சி

### நானாட்டான் டிலாசால் கல்லூரி...

இன்னும் சிறப்பாக தனது குருத்துவ வாழ்வில் 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருவும், மன்னார் மறைமாவட்டத்தின் முதலாவது குருமுதல்வரும் டிலாசால் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய அருடபணி சேவியர் குரூஸ் அடிகளாருக்கு பாடசாலைச் சமூகம் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தமை மகிழ்சியான விடயமாகும். இந்நிகழ்வில் நானாட்டான் பங்குத்தந்தை அருட்பணி சுரேந்திரன் றெவல் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் இப் பாடசாலையில் கல்விகற்ற அருட்தந்தையர்கள், டிலாசால் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்●

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

4ம் பக்கத் தொடர்ச்சி

### புனித செபஸ்தியார் ஆலயத்...


திருப்பலியானது புனிதரின் தோழமையும் நம்பிக்கை மிகுந்த திரு அவையும் என்னும் கருப்பொருளில் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சிறப்பித்திருந்தார்கள். திருப்பலியினை தொடர்ந்து புனிதரின் திருச்சுரூபம் கிராமத்துக்குள் பவணியாக கொண்டு செல்லப்பட்டு பின்பு ஆலய முன்றலில் ஆசீர்வாதமும், செயலாளரினால் நன்றி உரையும் இடம்பெற்றது. திருவிழாவினை ஆயத்தம் செய்து ஒழுங்குபடுத்தி தேவையான ஆயத்தங்களை செய்து ஒத்துழைப்பு வழங்கி நிறைவேற்றிய பங்குத்தந்தை, உதவிப் பங்குத்தந்தை, திருத்தொண்டர், அருட்சகோதரிகள், பொதுநிலைப் பணியாளர்கள், இறைமக்கள் அனைவருக்கும் நன்றிகளையும், இனிய திருவிழா நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## ஈர விழிகளுடன் 40வது நாள் நினைவஞ்சலி



"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன கடுந்தொல்லை எதுவும் அவர்களை தீண்டாது." (சா.மோ 3:1)

### திருமதி.மேரிமலர் அந்தோனி துரம்

(மலரம்மா ரீச்சர்) பேசாலை

மலர்வு 1932.06.06 | உதிர்வு 2021.12.29

எமதருமை அம்மாவே! பேசாலை மண்ணின்
பெயர் சொல்லும் சீமாட்டியே பெரிய குடும்பத்தின்
அட்டைப்படம் கிழிந்து விட்டது ஏனோ! அமைதியான
கடல் ஒன்று அப்படியே திடீரென்று வற்றி விட்ட உணர்வை
தந்து விட்டு ஏன் சென்றாய். விழிகளும் உங்களை தேடி!
விளிம்பின் நினைவில் சோகம் சுமக்க விழிகள் ஏதும் உண்டோ!
உங்களை வையகம் மீண்டும் காண மண்மீது
தொண்ணூறு வருட ஆதிக்கம் செலுத்திய எம் அன்புத்தாயே.
பாச மலரம்மா நீங்கள் எங்கள் வண்ணம் கொண்ட
அழகு மலர் மரணக் கடலில் விழுந்து விட்டதே.
புது வருடம் கொண்டாட ஆண்டவன் பாதம் தொட்ட மலரே,
உங்கள் விண்ணுலக வாழ்வு மகிழ்வாய் அமைய
விடை தந்தோம்,

பிரிவின் மடியில்
மகன், மருமகன், பேரப்பிள்ளைகள்,
குடும்ப உறவுகள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1940 06 21



விண்ணில் 2021 02 02

### திருமதி.அந்தோனி விக்ரோறியா

(பெரிய நீலாசேனை, உயிலங்குளம்)

"அவர்தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார்
அவர்தம் இறக்கைகளின் கீழ் நீர் புகலிடம் காண்பீர்" (தி.பா 91:4)

அன்பின் உருவே எங்கள் பண்பான பாசமான அம்மா!
ஆதரவை அல்லும் பகலும் அள்ளித் தந்தாயே நீ எமக்கு,
இன்று நீ எம்மை தவிக்க விட்டு இறைவனிடம் சென்றாயே தாயே!
ஈன்றாய் நீ எம்மை இன்பமுடன் உன் பிள்ளைகளாய் அம்மா,
உன் வயிற்றில் பிறந்திடவே என்ன தவம் செய்தோமோ யாம்
ஊரார் போற்றிடவே உதிரமதை பாலாய் ஊட்டி வளர்த்தாய் உன் பிள்ளைகளை
என்றென்றும் இவ்வுலகில் எம் தாயாய் நீயே வந்திடுவாய் எம் தாயே,
ஏங்கித் தவிக்கின்றோம் உன்னை நாம் மீண்டும் பார்ப்பதற்கு
ஐயகோ! எம்மை தனியே தவிக்கவிட்டு தந்தையிடம் சென்றாயோ நீயே
ஒரு தடவை அம்மா என்று ஆசையுடன் நாம் அழைக்க
ஓடோடி மீண்டும் வரமாட்டாயா அம்மா! ஏங்குகின்றோம் நாம்
மறவோம் மறவோம் இம்மண்ணில் எந்நாளும் உன்னை அம்மா.

உம் பிரிவால் என்றும் நினைந்திடும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவன்
இறப்பிலும் வாழ்வார்" (யோவா 11:25)



### திருமதி.செபஸ்ரியான் பிறிஜிற்றா பெர்னாண்டோ

(பேசாலை)

பிறப்பு 1930.03.26 | இறப்பு 2021.02.27

எங்கள் பாசமிகு அம்மா, ஆண்டொன்று மறைந்தாலும்
எங்கள் கவலை மாறாது. அம்மா பாசத்தோடு எம்மை
வளர்த்து பொருள் தந்து எம்மை வாழ வைத்த அன்பு அம்மா
உங்கள் பிரிவால் நாம் கவலை கொள்கின்றோம் அம்மா
துன்பத்தை நீங்கள் சுமந்தாலும் புன்னகையுடன் எங்களுக்கு
இன்பத்தை ஊட்டி வளர்த்தீர்கள் அம்மா! இவ்வுலகில் மீண்டும்
வந்து எங்களுக்குத் தாயாக வேண்டும் அம்மா. மறுபடியும்
எம்முடன் கலந்து வாழ வேண்டும்
இறைவா! நித்திய இளைபாற்றியை அம்மாவுக்குக் கொடுத்தருளும்

நினைவுகள் தாங்கி நிற்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள், ஊர்மக்கள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

### திரு.அந்தோனி மரியதாசன் குருஸ்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) பெரிய பண்டிவிரிச்சான் மேற்கு


மலர்வு 1940.06.22 | உதிர்வு 2021.02.06



அதிகாலைத் திருந்தாதி மணிகேட்க அன்று
அடி போட்டு எமை எழுப்பி ஆலயம் செல்ல வைத்ததையும்
மாலைத் திருந்தாதியில் குடும்ப செமாலைக்கு மனையில்
கைகூப்பி குழுமி இருந்தமையும் மறவோம் இன்றும் நாம்
மறவோம்...
உம் ஏழு மந்தைகளுள், ஒரு மந்தையேனும் வழி
தவறிச்செல்லாது அதி கடின கண்டிப்புடன் – இன்றும்
ஒழுக்கமாய் வாழ உரமிட்டீரே – ஆயனே!
குறைந்த ஊதியத்தில் குறைவின்றி எமை – வளர்த்தீரே!
அப்பா உம் ஆன்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
பாசமிகு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்

## 18ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி. பி. பிரான்சிஸ்கம்மா குரூஸ்

(முத்தரிப்புத்துறை)

பிறப்பு 01.12.1930 | இறப்பு 29.02.2004

பதினெட்டாண்டுகள் பாரினில் கடந்தாலும்
சுமந்தே சுகப்பட்டவள் நீ அம்மா
சுகமாய் வாழ வழி சமைத்தாய்
தேவனை வேண்டுவதில்
உறுதியாய் இருந்தாய் அம்மா
விசுவாச வேரை குடும்பத்தில் விதைத்தாய்
விதைத்த விதைகள் விருட்சமாக
நின்றிட நிர்மலன் இயேசுவை
நிதமும் மன்றாடுவாய் அம்மா!
உன் ஆன்மா இறையன்பில் சங்கமிக்க
இறைஞ்சுகின்றோம் இறையோனை

பிரிவில் இறையில் மகிழும்
குடும்பத்தார் அனைவரும்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1995 02 22



உதிர்வு 2021 02 18

### செல்வன். சிறிதரன் ஜெசிகரன் (டானி)

(தாழ்வுபாடு, மன்னார்)

அன்பு மகனே..! பாசமுள்ள சகோதரமே..!
மகனே என்றழைக்க இன்றில்லை நீயும்
இம்மையில் நீர் வாழ்ந்த வாழ்வினைத் துறந்து
எம் பெருமான் இயேசுவின் அடிதனையடைந்து
உம் உறவுகளைப் பிரிந்து ஆண்டும் ஒன்றானதுவே
அம்புவி மீதினில் இன்புற்று வாழ உம்மை
எம் இதய மீதினில் ஏற்று யாமென்றும்
ஆன்ம ஈடேற்றம் பெற்றென்றும் அமைதியில்
ஆறுதல் அடைந்திட ஆண்டவனை வேண்டியே
ஆண்டுகள் பலநூறு ஆனாலும் மறவாது அஞ்சலித்தோம்
அஞ்சலித்தோமே!

பிரிவால் துயருறும்
அன்னை, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-8801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org